# விளையாட்டுக்களில் வினாடி வினா விடை




பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI

# விளையாட்டுக்களில் வினாடி வினா விடை

தேசிய விருது பெற்ற
பல்கலைப் பேரறிஞர்
**டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**
M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI
முன்னாள் பேராசிரியர், ஆய்வுத்துறைத் தலைவர்,
ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரி
சென்னை-35

**விளையாட்டுப் பதிப்பகம்**
8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு
தி.நகர், சென்னை-600 017
தொலைபேசி 4342232

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | விளையாட்டுக்களில் வினாடி வினாவிடை |
| மொழி | தமிழ் |
| பொருள் | விளையாட்டு சாதனைகள் |
| ஆசிரியர் பெயர் | டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா |
| பதிப்பு | முதல் பதிப்பு ஏப்ரல் 1999 |
| நூலின் அளவு | கிரவுன் |
| படிகள் | 1200 |
| அச்சு | 11 புள்ளி |
| பக்கங்கள் | 80 (76+4) |
| நூல் கட்டுமானம் | அட்டைக்கட்டு |
| **விலை** | ரூ 15-00 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| பதிப்பு | விளையாட்டுப் பதிப்பகம்<br>8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு<br>தி.நகர், சென்னை-600 017 |
| அச்சிட்டோர் | கிரேஸ் பிரிண்டர்ஸ்<br>8, போலீஸ் குவார்ட்டர்ஸ் ரோடு<br>தி.நகர், சென்னை-600 017 |

# முன்னுரை

விரிந்த மலர்தொறும் பறந்து சென்று அமர்ந்து, விரும்பிய தேனை நுகர்ந்து சேகரிக்கும் தேனீபோல, வேறுபல நூல்களுக்குக் குறிப்பெடுப்பதற்காகத் திரிந்து, நான் திறந்த விளையாட்டுத்துறை நூல்களில் எல்லாம் வீறு பெற்றுத் தோன்றிய பல சுவையான நிகழ்ச்சிகளை அவ்வப்போது கண்டேன். குறித்துக் கொண்டேன்.

விளையாட்டுக்களிலே வீரர்களும் வீராங்கனைகளும், வேட்கை கொண்டவர்களும் பதித்துச் சென்ற சாதனைகள், பலகாலம் பெற்ற சோதனைகள், விளையாட்டில் மயங்கிக் கிடந்த மன்னர்கள், இராணிகள், செல்வந்தர்கள், அவர்கள் சிந்திச் சென்ற குறிப்புக்கள் அனைத்தையும் சேகரித்து, இன்று வினா விடையாகத் தொகுத்துத் தந்திருக்கிறேன்.

விளையாட்டு நிகழ்ச்சிகளை எல்லாம் விளையாடும் இயக்கங்களிலே நேரே கண்டும், வானொலியிலே கேட்டும் செய்தித்தாள்களிலே படித்துச் சுவைக்கும் அன்பர்கள் இந்நூலில் உள்ள வினாக்களை ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்ள, ஒருவர் பதில் சொல்ல முடியாதபோது திகைத்துத் துள்ள, இவ்வாறு கூடும் போதெல்லாம் கேட்டு மகிழ வாய்ப்புத் தரும் வண்ணம் வினாக்களைத் தந்துள்ளேன்.

வினாவை முதலில் படியுங்கள். உடனே பதில் தெரிந்தால் சொல்லிப் பாருங்கள். தெரியவில்லை என்றால் சற்று நேரம் சிந்தனை செய்து கூறுங்கள். இல்லையேல்...!

ஏன் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்து முனகுபவர்களும் சிலர் உள்ர். அவர்களுக்காகவும் சேர்த்து, பெறும் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு, வினாவுக்குக் கீழேயே விடையையும்

கொடுத்திருக்கிறேன்.

எவ்வளவு தூரம் இந்த விளையாட்டுக்களில் நாம் லயித்திருக்கிறோம். வரலாறு ஆகியிருக்கும் அந்தச் செய்திகளைக் கிரகித்திருக்கிறோம் என்று தன்னைத் தானே சோதித்துப் பார்க்க இந்நூல் ஒரு சமய சஞ்சீவி.

அன்றாடம் பத்திரிக்கையிலே வந்த செய்திகள்தான் என்றாலும் சில நினைவாற்றலைத் தூண்டும் சங்கதிகளாகும்.

கல்வித்துறையிலே கணிசமான அளவுக்கு ஒரு பெரும் இடத்தைப் பெற்றுத் திளைக்கும் விளையாட்டுத் துறையில், இன்பத்துடன் ஈடுபடும் மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் உற்சாகம் ஊட்டுவதாக அமையும்.

விளையாட்டுத்துறை வளர பணியாற்றும் ஆசிரியர் ஆசிரியைகளின் வளமான சிந்தனைக்கு, சற்றுப் பக்கத் துணையாகவும் இந்நூல் உதவும்.

விளையாட்டை விரும்பும் மக்களுக்கு இது ஓர் நல்ல வழிகாட்டியாகவும் விளங்கும்.

ஆயிரமாயிரம் வினாக்களை நமக்கு விடுத்துவரும் பரந்த விளையாட்டுத் துறையில் பிறந்திருக்கும் சில நூறு கேள்விகளை, இயன்ற வரையில் எழுதித் தொகுத்துள்ளேன்.

முடிந்தவரை எல்லா விளையாட்டுக்களில் இருந்தும் கேள்விகள் கேட்கப்பட்டு இருக்கின்றன என்றாலும் இது ஒரு முழு நூல் அல்ல. பெரும் முயற்சிக்கு இது ஒரு தொடக்கம் என்றால் அதுதான் உண்மை.

ஞானமலர் இல்லம், **டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா**
சென்னை-17,

# விளையாட்டுக்களில் வினாடி வினா விடை

1. **1984ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் எங்கே நடைபெற்றன? அதில் சிறப்பான அம்சம் என்ன?**

அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்றது. அமெரிக்க வீரர் ஜெசி ஓவன்சைப் போல, கார்ல் லூயிஸ் என்ற அமெரிக்க வீரர் 4 தங்கப் பதக்கங்களை வென்று காட்டியதுதான் சிறப்பான அம்சமாகும்.

2. **உயரத் தாண்டும் போட்டியில் இடம் பெறுகின்ற தாண்டும் முறைகளை (ஸ்டைல்) விளக்குக.**

1. கத்ததிரிக்கோல் தாண்டு முறை: மிகப் பழையது. இது 1988ம் ஆண்டோடு கைவிடப்பட்டது.

2. கிழக்கிந்திய தாண்டுமுறை: இதன் ஆரம்ப கர்த்தா ஸ்வீனி என்பவர்

3. மேற்கத்திய தாண்டுமுறை: (Western Roll) இதைக் கண்டு பிடித்தவர் ஜார்ஜ் ஹாரின் எனும் அமெரிக்கர்.

4. பாஸ்பரி தாண்டுமுறை: கண்டு பிடித்தவர் டிக் பாஸ்பரி என்ற அமெரிக்கர்.

3. **இந்தியாவின் சிறந்த ஓட்டக்காரி என்ற புகழைப் பெற்ற வீராங்கனை யார்?**

கேரளாவைச் சேர்ந்த பி.டி.உஷா. 1984 ஒலிம்பிக் போட்டியில் 400 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் நான்காவதாக வந்து இந்தியா பெருமை பெறச் செய்தார்.

4. **ஆஸ்திரேலியாவில் நடந்த ஒருநாள் கிரிக்கெட்**

**போட்டித் தொடரில் சிறந்த ஆட்டக்காரர் யார்? (1985)**

இந்தியாவைச் சேர்ந்த ரவி சாஸ்திரி. அவருக்கு விலை உயர்ந்த கார் ஒன்று பரிசு அளிக்கப்பட்டது.

5. **விரைவோட்டத்தில் ஓடும் தொடக்கத்தில் எத்தனை தொடக்க முறைகள் உள்ளன? பெயர்களைக் கூறுக?**

1. மிகக் குனிந்து நின்று தொடக்கம் (Crouch Start)
2. இடைநிலைத் தொடக்கம் (Medium Start)
3. நீள்நிலைத் தொடக்கம் (Elongated Start)

6. **சடுகுடு ஆட்டத்தில் எத்தனை ஆட்டக்காரர் களை மாற்றி ஆடலாம்?**

ஆட்ட நேரத்தில், எந்த நேரம் ஆனாலும் 3 மாற்று ஆட்டக்காரர்களை மாற்றிக் கொண்டு ஆடலாம். யாருக்காவது காயம் ஏற்பட்டால், 2 ஆட்டக்காரர்களை அதற்காக மாற்றிக் கொள்ளலாம். ஒருமுறை ஆட உள்ளே ஒருவர் நுழைந்தால், அவர் மீண்டும் வெளியே வந்தும் மற்றவர் மீண்டும் உள்ளே சென்றும் ஆட அனுமதியில்லை.

7. **புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் எந்த ஆண்டு மீண்டும் தொடங்கப் பெற்றன? எந்த நாட்டில் முதல் பந்தயங்கள் நடைபெற்றன?**

1896ம் ஆண்டு கிரேக்கத்தில் உள்ள ஏதென்ஸ் நகரில் நடைபெற்றன.

8. **உலகத்திலேயே மிகச் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர் என்று புகழப்பட்டவர் யார? அவரது சாதனை என்ன?**

மேற்கிந்திய தீவினைச் சேர்ந்த கேரி சோபர்ஸ் (Gary Sobers), அவர் 93 டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் 26 சதங்களுக்கு மேல் எடுத்து இருக்கிறார். 236

விக்கெட்டுக்களை வீழ்த்தி இருக்கிறார். அவர் 365 ஓட்டங்கள் எடுத்தும் ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

9. **இப்போது கிரிக்கெட் உலகில் சிறந்த சாதனையாளர் யார்?**

பிரியன்லாரா.

10. **அவர் நிகழ்த்திய ஓட்டங்களின் சாதனை எவ்வளவு?**

375 ஓட்டங்கள்.

11. **கைப்பந்தாட்டத்தைக் (Volley Ball) கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?**

வில்லியம் மோர்கன் (William Morgan) எனும் அமெரிக்கர்.

கண்டு பிடித்த ஆண்டு 1895.

12. **உடற்கல்வியைக் கட்டாயப் பாடத் திட்டமாக ஆக்கியிருக்கும் மாநிலங்கள் எவை எவை?**

தமிழ்நாடு மட்டுமே. இந்தியாவில் முதன் முதலாக உடற்கல்வியைக் கட்டாயப் பாடமாக்கிய பெருமை தமிழ் நாட்டையே சாரும்.

13. **கூடைப்பந்தாட்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?**

டாக்டர் ஜேம்ஸ் நெய்சுமித் (Dr. James Naismith) எனும் அமெரிக்கர். கண்டு பிடித்த ஆண்டு 1891. (1892ம் ஆண்டு என்றும் சிலர் கூறுவர்)

14. **டென்னிஸ் (Tennis) என்றதும் உடனே நினைவுக்கு வருகின்ற இந்திய ஆட்டக்காரரின் பெயர் என்ன?**

தமிழ்நாட்டைச் சேர்ந்த ராமனாதன் கிருஷ்ணன்

15. **உலகிலேயே சிறந்த குத்துச் சண்டை வீரர் (பேரெடைப்**

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஜிஜாரே கானோ (Dr. Jijoro Kano).

23. **ஒலிம்பிக் பந்தயங்களில் பின்பற்றப்படுகின்ற இரண்டு மல்யுத்த முறைகள் யாவை?**

1. விருப்பம்போல் மல்யுத்தம் செய்தல் (Free Style)
2. கிரேக்க ரோமன் முறை (Greco Roman Style)

24. **பூப்பந்தாட்டத்திற்கு ஆரம்ப காலத்தில், இந்தியாவில் நிலவி வந்த பெயர் என்ன?**

இது 'பூனா' என்று அழைக்கப்பட்டு வந்தது.

25. **தளப்பந்தாட்டத்தைக் (Base Ball) கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?**

நியூயார்க் நகரிலுள்ள கூப்பர் டவுனைச் சேர்ந்த 'ஏப்னர் டபுள்டே' (Abner Double Day) என்பவர். கண்டு பிடிக்கப்பட்ட ஆண்டு 1839 ஆம் ஆண்டு என்பது ஒரு குறிப்பு.

26 **கால்பந்தாட்டத்தில் 'ராஜா' (King in Foot Ball)என்று சிறப்பாக அழைக்கப்பட்டவர் யார்?**

பிரேசில் நாட்டைச் சேர்ந்த 'பிலி' (Pele) என்பவர்.

27. **புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் எத்தனை நாட்கள் நடைபெறுகின்றன?**

16 நாட்கள்.

28. **மாரதான் என்னும் நெட்டோட்டத்தின் ஓடுவதற்குரிய தூரம் எவ்வளவு?**

26 மைல் 385 கெஜ தூரம்

29. **ஒலிம்பிக் பந்தயத்திற்குரிய கொடியில் (Olympic Flag)**

**எத்தனை வளையங்கள் உண்டு. அவற்றின் வண்ணங்கள் யாவை?**

5 வளையங்கள். நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு என்ற வண்ண வளையங்கள் வெள்ளைக் கொடியில் வரையப்பட்டிருக்கும்.

**30. கால்பந்தாட்டத்தில் ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள் உண்டு?**

11 ஆட்டக்காரர்கள். 5 மாற்றாட்டக்காரர் களும் உண்டு.

**31. முதல் கிரிக்கெட் உலகக் கோப்பைக்கான போட்டி எங்கே எந்த ஆண்டு நடைபெற்றது? (World Cup) வென்ற நாடு எது?**

போட்டி நடந்த இடம் லண்டன். நடந்த ஆண்டு 1975. வென்ற நாடு வெஸ்ட் இன்டீஸ் (மேற்கிந்திய தீவினர்).

**32. முதல் உலகக் கிரிக்கெட் போட்டிக்கான வெற்றிக் கோப்பையின் (World Cup) பெயர் என்ன?**

புருடென்சியல் உலகக் கோப்பை (Prudential World Cup).

**33. கனடா நாட்டின் டோரண்டோ நகரில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிக்குரிய கோப்பையின் பெயர் என்ன?**

சகாரா கோப்பை

**34. முதல்முதலாக 'கைப்பந்தாட்டம்' என்று பெயர் சூட்டி அழைத்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

ஸ்பிரிங்ஃபீல்டுக் கல்லூரியைச் சார்ந்த டாக்டர் எச்.ஏ.கால்ஸ்டெட் (Dr. H.A. Halstead) எனும் அமெரிக்கர்.

**35. கூடைப்பந்தாட்டத்தில் ஒரு குழுவுக்கு எத்தனை**

**ஆட்டக்காரர்கள் உண்டு?**

(நிரந்தர) விளையாடும் ஆட்டக்காரர்கள் 5 (Regular Players) மாற்றாட்டக்காரர்கள் 7 பேர்.

36. **1975ம் ஆண்டு உலக மேசைப் பந்தாட்டப் போட்டி (World Table Tennis) எங்கே நடைபெற்றது?**

பாரதத்தில் உள்ள கல்கத்தா நகரில் அங்கே புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த ஈடன் தோட்டத்தில் (Eden Gardens) நடைபெற்றது.

37. **உலக மேசைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெறுவோர்க்கு வழங்கப்படுகின்ற வெற்றிக் கேடயங்களின் (Trophy) பெயர் என்ன?**

ஆண்களுக்கான போட்டி: ஸ்வேதிலிங் கோப்பை (Swaythling Cup)

பெண்களுக்கான போட்டி: கர்பிலான் கோப்பை (Corbillon Cup).

38. **1980 மாஸ்கோ ஒலிம்பிக் பந்தயத்தில் பெண்கள் 100 மீட்டர் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர் யார்? அவரது ஒலிம்பிக் சாதனை என்ன?**

ரஷ்யாவைச் சேர்ந்த லூடிமிலா கோண்ட்ராடியேவா அவர் ஓடிய சாதனை நேரம் 11.06 வினாடிகள்.

39. **பில்லிஜீன்கிங் என்பவர் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் எத்தனை முறை வெற்றி பெற்றிருக்கிறார் (Title)?**

6 முறைகள்

40. **குத்துச் சண்டைப் (Boxing) போட்டிக்காகப் பின்பற்றப்படும் விதிகளின் பெயர் என்ன?**

கியூன்ஸ்பெரி விதிகள் (Queensbury Rules).

41. ,இந்தியாவின் தலை சிறந்த பிலியர்ட்ஸ் ஆட்டக்காரர் யார்?

கீத் சேத்தி

42. 22 பந்துகளை வைத்துக் கொண்டு ஆடுகின்ற ஒரு ஆட்டத்தின் பெயர் என்ன?

ஸ்நூக்கர் (Snooker).

43. ஆங்கிலக் கால்வாயை (English Channel) முதன் முதலில் நீந்திக் கடந்த சாதனையை செய்த பெண்மணி யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

பிரான்சிலிருந்து இங்கிலாந்து வரை 1926 இல் நீந்திய வீராங்கனை ஜெர்டுரூட் எடர்லி (Jertrude Ederlie) அமெரிக்கப் பெண்ணான எடர்லி நீந்த எடுத்துக் கொண்ட நேரம் 14 மணி 39 நிமிடங்கள்.

44. இந்திய நீச்சல் வீரர் ஒருவர் பத்மஸ்ரீ பட்டத்தைப் பெற்றிருக்கிறார்? அவர் யார்? எந்த ஆண்டில்?

மிகிர்சென் எனும் நீச்சல் வீரர் (Mihirsen) 1959ம் ஆண்டு.

45. 1997 ம் ஆண்டின் உலக சதுரங்க வெற்றி வீரராகத் திகழ்பவர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

விளாடி மிர் கிராம்னிக். இவர் ரஷ்ய வீரர்

47. உலகிலேயே அதிக அளவு எடை தூக்கும் போட்டியில் (Heavy Weight) வெற்றிச் சாதனையை உண்டாக்கியவர் யார்? எந்த நாட்டவர்? அவர் நிகழ்த்திய வெற்றிச் சாதனையின் அளவு என்ன?

'வாசிலி அலெக்சியால்' எனும் ரஷ்யர் அவரது சாதனை 542.5 கிலோ. லண்டனில் நடந்த போட்டியில் வெற்றி பெற்றார்.

**48. டெகாதலான் (Decathlon) என்ற போட்டியில் எத்தனை நிகழ்ச்சிகள் (Events) உண்டு? அவைகளின் பெயர் என்ன?**

10 நிகழ்ச்சிகள்.

100 மீட்டர் ஓட்டம், 1.0 மீட்டர் தடை தாண்டி ஓட்டம். கோலூன்றித் தாண்டல்.

200 மீட்டர் ஓட்டம். உயரத் தாண்டல், குண்டு எறிதல்.

1500 மீட்டர் ஓட்டம், நீளத்தாண்டல், தட்டெறிதல், வேலெறிதல்.

**49. டெகாதலான் நிகழ்ச்சிகள் எத்தனை நாட்களுக்கு நடைபெறும்?**

ஒருநாளைக்கு 5 நிகழ்ச்சிகள் என்று இரண்டு நாட்களுக்குள்ளேயே நடந்து முடிகின்றன.

**50. ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் 4 நிமிடத்திற்குள்ளாக முதன்முதலில் ஓடி உலக சாதனையை ஏற்படுத்தியவர் யார்?**

பிரிட்டனைச் சேர்ந்த ரோகர் பானிஸ்டர் என்பவர். (Roger Bannister)

**51. ஒலிம்பிக் பந்தயங்களில் இந்தியா எந்த ஆண்டு முதன்முதலாகப் பங்கேற்றது?**

1928ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் நடந்த பந்தயங்களில்

**52. ஒலிம்பிக் பந்தயங்களில் முதன் முதலாகக் கைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றபோது வெற்றி பெற்ற நாடுகளில் முதல் மூன்று நாடுகளை வரிசைப்படுத்திக் கூறு?**

வென்றது ரஷ்யா. தொடர்ந்தது செக்கோசுலேவோகியா.

மூன்றாவதாக வந்தது ஜப்பான்.

**53. கைப்பந்தாட்டத்தில் ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள் இருக்க வேண்டும்.**

நிரந்தர ஆட்டக்காரர்கள் 6. மாற்று ஆட்டக்காரர்கள் 6.

**54. இந்தியா வளைகோல் பந்தாட்டத்தில் (ஒலிம்பிக் பந்தயத்தில்) முதன்முதலாக வெற்றி பெற்றது எந்த ஆண்டில்?**

1928ம் ஆண்டில் முதன் முதலாகச் சென்று வெற்றி நாடாக இந்தியா திரும்பியது.

**55. இங்கிலாந்து எப்பொழுதாவது வளைகோல் பந்தாட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறதா?**

இரண்டு முறை வெற்றி பெற்றிருக்கிறது. 1908ம் ஆண்டிலும், 1920ம் ஆண்டிலும்.

**56. இந்திய கூடைப் பந்தாட்டத் தலைமைக் கழகம் எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது?**

1950ம் ஆண்டு

**57. இந்தியக் கூடைப் பந்தாட்டக் கழகத்தின் முதல் தலைவர் யார்?**

C.C. ஆபிரகாம்.

**58. இந்தியாவில் 1974ம் ஆண்டு நடந்த உலக மேசைப் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற நாடுகள் யாவை?**

நாடுகளுக்கான குழுப் போட்டி: சீனா

ஆண்களுக்கான போட்டி: யூகோசுலோவியா

பெண்களுக்கான போட்டி: தென் கொரியா

**59. கிரேண்ட் ஸ்லேம் (Grand Slam) என்னும் மாபெரும் டென்னிஸ் விருதினைப் பெற எத்தனைப் போட்டிகளில் ஒருவர் வெற்றி பெற வேண்டும்?**

நான்கு நாடுகளில் நடக்கும் டென்னிஸ் போட்டி ஆட்டங்களில் ஒருவர் வெற்றி பெற வேண்டும். அந்நாடுகள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்சு, பிரிட்டன் ஆகும்.

**60. 'சிறந்த வெற்றி வீரர்' எனும் கிராண்ட் ஸ்லேம் என்ற பட்டத்தை இருமுறை வென்ற வீரர் யார்?**

ராட் லேவர் (Rod Laver) என்னும் ஆஸ்திரேலியர்.

**61. கால்பந்தாட்டப் போட்டியை நடத்தும் நடுவர் ஒருவர் தன் கைவசம் வைத்திருக்க வேண்டிய உபகரணங்கள் யாவை? (Equipments)**

ஒரு விசில், ஒரு நாணயம், ஒரு கைக்கெடிகாரம், ஒரு பென்சில், ஒரு குறிப்பேடு.

**62. நீளத்தாண்டும் போட்டியில் (Long Jump) ஒலிம்பிக் சாதனை என்ன?**

8.90 பாப்பீமன் எனும் அமெரிக்கரின் சாதனையாகும். 8.96 மீட்டர் என்பது தற்போதைய சாதனை.

**63. 25 அடி தூரத்திற்கு மேல் முதலில் தாண்டிநீளத் தாண்டலில் புது ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்திய வீரர் யார்?**

எட்வர்டு ஹேம் (Edward Hamm) எனும் அமெரிக்கர். 1928ம் ஆண்டு அவர் புரிந்த சாதனையின் தூரம் 25' 4½''.

**64. 1936ம் ஆண்டு நீளத் தாண்டும் போட்டியில் புதிய ஒலிம்பிக் உலக சாதனையை ஏற்படுத்திய வீரர் யார்? அவரது சாதனை எத்தனை ஆண்டுகள்**

**நிலைத்திருந்தது?**

ஜெசி ஓவன்ஸ் என்பவர் ஏற்படுத்தினார். அவர் தாண்டிய தூரம் 26' 5½''. 27 ஆண்டுகளுக்கு மேல் அவரது சாதனையை யாராலும் எட்டிப் பிடிக்காதவாறு அமைந்து விட்டிருந்தது.

65. **ஒலிம்பிக் சாதனைக்கும் (Olympic Record) உலக சாதனைக்கும் (World Record) உள்ள வித்தியாசம் என்ன?**

ஒலிம்பிக் சாதனை என்பது நான்காண்டு களுக்கு ஒருமுறை நடக்கும் ஒலிம்பிக் பந்தயங்களில் நிகழும் சாதனை.

உலக சாதனை என்பது, அவ்வப்போது ஆங்காங்கே நடக்கும் விளையாட்டுப் பந்தயங்களின் போது நிகழ்கின்ற சாதனை. அதனை அந்நாட்டு ஒலிம்பிக் கழகம் அங்கீகரித்து உலகக் கழகத்திற்கு அனுப்பி, அங்கேயும் அங்கீகரிக்கப்பட்டால், அப்போது தான் அது உலக சாதனையாகிறது.

66. **காமன் வெல்த் விளையாட்டுக்கள் (Common Wealth Games) எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றன?**

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை.

67. **நீளத்தாண்டும் போட்டியில் ஆசிய சாதனை (Asian Record) எவ்வளவு? சாதனை புரிந்த வீரரின் பெயர் என்ன?**

இந்தியாவைச் சேர்ந்த வீரர் யோகண்ணன் அவர் நிகழ்த்திய சாதனையின் தூரம் 8.07 மீட்டர்.

68. **5 நிமிடங்களுக்குள் ஒரு மைல் தூரத்தை ஓடி முடித்த வீராங்கனை யார்?**

தியானா சூசன் லீதர் (Diana Susan Leather)

69. **டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 100 ஆட்டங்களுக்கு மேல் விளையாடியிருக்கும் கிரிக்கெட் ஆட்டக்காரர் யார்?**

காலின் கெட்ரி (Colin Cowdry). இங்கிலாந்து வீரர். அவர் விளையாடிய டெஸ்டுகள் 108க்கு மேல்.

70. **பந்தடிக்கும் ஆட்டக்காரர் (Batsman) அடித்தாடிய பந்தை ஒரு தடுத்தாடும் எதிராட்டக்காரர் (Fieldsman), தனது தொப்பியால் தடுத்து நிறுத்தலாமா?**

தடுக்கக்கூடாது.

71. **அவ்வாறு தடுத்து நிறுத்தி விட்டால் என்ன செய்வது?**

அதற்குரிய தண்டனையாக, பந்தை அடித்தாடிய குழுவிற்கு 5 ஓட்டங்கள் நடுவரால் கொடுக்கப்படும்.

72. **ஒரே நாளில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் மூன்று சதங்கள் அடித்து புதிய சாதனையை ஏறபடுத்தியவர் யார்?**

டான் பிராட்மேன் (Don Bradman) எனும் ஆஸ்திரேலியர். 1930ம் ஆண்டு லீட்ஸ் எனுமிடத்தில், ஆஸ்திரேலியா விற்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடந்த டெஸ்டில் இந்தச் சாதனையை ஏற்படுத்தினார்.

73. **அவர் அந்தச் சாதனையை எப்படி ஏற்படுத்தினார்.**

ஆட்டம் தொடங்கி மதிய உணவுக்கு முன்னால் 1 சதம். தேனீருக்கு முன்னால் 1 சதம். பிறகு ஆட்டம் முடிவிற்குள் 1 சதம். அவ்வாறு அவர் எடுத்த மொத்த ஓட்டங்கள் 309.

74. **பழைய ஒலிம்பிக் பந்தயம் (கிரேக்க நாட்டில் மட்டுமே நடந்து வந்தது). யாரால், எப்பொழுது நிறுத்தப்பட்டது?**

கி.பி. 394ல் பந்தயங்களை நடத்தவிடாமல் நிறுத்தித் தடுத்தவர் அப்பொழுது ரோம் சாம்ராஜ்யத்தை ஆண்ட சக்கரவர்த்தி தியோடோசியஸ்.

**75. பழைய ஒலிம்பிக் பந்தயம் முதன் முதலாக எப்பொழுது தொடங்கப்பெற்றது?**

கி.மு. 776ல். (இதனை சிலர் கி.மு. 1258 என்றும், கி.மு. 884 என்றும் கூறுகின்ற கருத்து பேதங்களும் உண்டு).

**76. பழைய ஒலிம்பிக் பந்தயங்கள் எத்தனை நாட்கள் நடந்து வந்தன?**

5 நாட்கள்

**77. கி.மு. 776ல் நடந்த முதல் ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி பெற்ற முதல் வீரன் யார்? அவரது தொழில் என்ன?**

கரோபஸ். அவரது தொழில் சமையல்.

**78. 100 மீட்டர் ஓட்டத்தை முதன் முதலில் 10 வினாடிகளில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியவர் யார்?**

ஆர்மின் ஹேரி என்பவர் (Armin Hary)

**79. இந்திய வீரர்களில் யாராவது ஒரு வீரர் எப்பொழுதாவது ஒலிம்பிக் பந்தயங்களில் வெற்றி பெற்று பதக்கங்கள் பெற்றிருக்கிறாரா?**

ஒரே ஒருமுறை. 1900ம் ஆண்டு நார்மன் பிரிட்சார்ட் (Norman Pritchard) என்பவர். 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்றிருக்கிறார். கல்கத்தாவிலே பிறந்த இவர் இங்கிலாந்திலே குடியேறிவிட்டார்.

80.

உலகக் கால்பந்தாட்டப் போட்டியில், அதிக முறை வெற்றி பெற்ற நாடு எது?

பிரேசில் மூன்று முறை வெற்றி பெற்றிருக்கிறது. 1958, 1962,

1970.

81.

கால்பந்தாட்ட வீரர் 'பீலி'யின் வெற்றி சாதனை (Record) என்ன?

18 ஆண்டுகள் முதல் தர கால்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு, 1254 ஆட்டங்கள் ஆடி 1216 வெற்றி எண்கள் (Goal) எடுத்திருக்கிறார்.

82.

பீலிக்குப் பிறகு சிறந்த ஆட்டக்காரர் என்று கருதப்படுபவர் யார்?

ஹாலந்து நாட்டைச் சேர்ந்த 'ஜோகன்க்ரப் (Johen Gruff).

83.

குறிக் கம்புகளைத் (Stump) தட்டி விட்டு, ஆட்டக் காரரை ஆட்டமிழக்கச் செய்யும் போது (Stumping) விக்கெட் காப்பாளர் கையில் பந்து இருக்க வேண்டியது அவசியமா?

ஆமாம்! பந்தை கையில் வைத்துக் கொண்டுதான் குறிக் கம்புகளைத் தட்டிவிட வேண்டும். பந்தில்லாமல் விக்கெட்டை வீழ்த்தினால், அது முறையல்ல. ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

84.

ஒரு டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில், எதிர்க் குழுவைச் சேர்ந்த 10 ஆட்டக்காரர்களையும் (விக்கெட்) ஆட்டமிழக்கச் செய்தவர் யார்? எங்கே?

1956ம் ஆண்டு, மான்செஸ்டரில் நடந்த ஒரு கிரிக்கெட் போட்டியில் ஜிம்லேக்கர் (Jimlaker) என்பவர் செய்த பெரிய சாதனை.

85.

டெஸ்ட் கிரிக்கெட்டில் நீண்ட நேரம் விளையாடியவர் என்ற பெயர் பெற்ற ஆட்டக்காரர் யார்? அவரது சாதனை என்ன?

ஹனிப் முகமது என்ற பாகிஸ்தானிய ஆட்டக்காரர். அவர் விளையாடிய நேரம் 16 மணி 10 நிமிடங்கள். ஆடிய இடம் பிரிட்ஜ் டவுன். பாகிஸ்தானுக்கும் மேற்கிந்தியத் தீவுக்கும் இடையே நடந்த போட்டியின் போது அவர் எடுத்த ஓட்டங்கள் 337 ஆகும்.

86.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா எப்போதாவது

அமாம். 1955ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த முதல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்று தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறது.

87.

இந்தியாவில் கைப்பந்தாட்டத் தலைமைக் கழகம் எப்பொழுது தொடங்கப் பெற்றது?

1951ஆம் ஆண்டு.

88.

உலகக் கோப்பைக்கான மூன்றாவது வளைகோல் பந்தாட்டப் போட்டிகள் எங்கே நடைபெற்றன?

மலேசியாவில் உள்ள மெர்டகா (Merdeka) விளையாட்டு அரங்கில் நடைபெற்றன.

89.

அதில் வெற்றி பெற்ற நாடு எது?

பாரதம் பாகிஸ்தானை வென்று தன் புகழை மீட்டுக் கொண்டது.

90.

அகில உலக வளைகோல் பந்தாட்டக் கழகத்தின் தலைவர் யார்? (F.I.H.)

ரேனே ஃபிராங்க (Rene Frank)

91.

மூன்றாவது வளைகோல் பந்தாட்ட உலகக் கோப்பைக்கான போட்டிகளில் ஒரே ஒரு ஆப்பிரிக்க நாடு கலந்து கொண்டது. அது எந்த நாடு?

கானா (Ghanna)

92.

கால் பந்தாட்ட பெரேஷன் கோப்பைக்கான போட்டிகள் சென்னையில் நடைபெற்ற இடம் எது?

சென்னை நேரு ஸ்டேடியத்தில்.

**93. அகில உலகக் கூடைப் பந்தாட்டக் கழகம் எந்த ஆண்டில் தொடங்கப் பெற்றது.**

1949ம் ஆண்டு.

**94. மேசைப் பந்தாட்டத்தில், உலகக் கோப்பைக்கான**

**போட்டியில் ஹங்கேரி எத்தனை முறை வென்றிருக்கிறது? அப்படியென்றால், வெற்றி பெற்றுத் தந்து தங்கள் தாயகத்தின் புகழை உயர்த்திய வீரர்கள் யார்? 2 முறை ஹங்கேரி வெற்றி பெற்றிருக்கிறது.**

1953 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் வென்றவர் எப்.சிடோ (F.Sido). 1975 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் வென்றவர் இஸ்ட்வன் ஜோனியர் (Istvan Jonyer).

95. **மேசைப் பந்தாட்டத்தில் உலக வீரராக (Individual Champion) வருகிறவருக்கு வழங்கப்படும் கோப்பையின் பெயர் என்ன?**

செயின்ட் பிரைட்வாஸ் (St. Bride Vase).

96. **தளப்பந்தாட்டத்தில் (Base Ball) ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள் உண்டு?**

9 பேர்.

97. **புதிய தளப்பந்தாட்டத்தின் தந்தை (Base Ball) என்று அழைக்கப்படுபவர் யார்?**

அலெக்சாண்டர் கார்ட்ரைட் என்பவர் (Alexander Cartright).

98. **இறகுப் பந்தாட்டத்தில் (Shuttle Cock) சிறந்த ஆட்டக்காரர் ஒருவர் அர்ஜுனா விருது தந்து கௌரவிக்கப்பட்டார். அவர் யார்?**

நந்து நடேகர் (Nandu Natekar).

99. **பள்ளி மாணவர் ஒருவர் இந்திய தேசிய மல்யுத்தப் போட்டியில் இந்திய வெற்றி வீரராக வந்திருக்கிறார். அவர் யார்? எந்த ஆண்டில் வெற்றி பெற்றார்?**

சேத்பால் (Satpal) என்ற மாணவர். 1970 ஆம் ஆண்டு

வெற்றி பெற்றார்.

100. **கிரேக்க ரோமன் மல்யுத்தமுறை எந்த ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்களில் சேர்க்கப்பட்டது?**

1908 ஆம் ஆண்டு.

101. **விருப்பம்போல் மல்யுத்தம் செய்கின்ற (Free Style) மல்யுத்தப் போட்டியில் ஒருவர் அடுத்தவருடைய கழுத்தைச் சுற்றிக் காலால் கிடுக்கி போன்ற ஒரு பிடியினை (Hold) போடலாமா?**

கூடவே கூடாது.

102. **அமெரிக்க சதுரங்க ஆட்டக்காரர் பாபிஃபிஷர் யாரைத் தோற்கடித்து உலக வெற்றி வீரர் விருதினைப் பெற்றார்?**

போரிஸ் ஸ்பேஷி (Boris Spasshy) என்னும் ரஷ்யரை, ஐஸ்லாந்து எனுமிடத்தில் தோற்கடித்து ***பாபி ஃபிஷர்*** அந்த விருதினைப் பெற்றார்.

103. **போரிஸ் ஸ்பேஷி என்பவர் எந்த ஆண்டு யாரைத் தோற்கடித்து உலக சதுரங்க வீரர் என்னும் பட்டத்தைப் பெற்றார்?**

1969 ஆம் ஆண்டு டைகரன் பெட்ரோசியன் என்பவரைத் தோற்கடித்து (Trigran Petrosian) பட்டம் வென்றார்.

104. **ஆங்கிலக் கால்வாயை ஆற்றோட்டத் திசையிலும் எதிர்த்திசையிலுமாக (Both Direction) இருபுறமும் முதலில் நீந்தியவர் யார்?**

எட்வர்ட்டேம் (Edward Temme) என்பவர்.

105. **1980 ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயம் எங்கே நடைபெற்றது?**

மாஸ்கோவில் (Moscow)

106. 1984 ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயம் எங்கே நடைபெற்றது?

அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில்.

107. ஒரு மைல் தூர ஓட்டத்தைச் சரியாக நான்கு நிமிடங்களில் முதன் முதலாக ஓடிய ஓட்டக்காரர் யார்? எந்த ஆண்டில்?

டேரக் இபாட்சன் (Darek Ibbotson). பிரிட்டனைச் சேர்ந்தவர். 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ந் தேதி இலண்டனில் நடந்த விளையாட்டுப் போட்டியில் இந்த சாதனையை ஏற்படுத்தினார்.

108. 1896 ஆம் ஆண்டு நடந்த முதல் ஒலிம்பிக் பந்தயத்தில் 100 மீட்டர் ஓட்டத்தில் சாதனை என்ன?

12 வினாடிகள்.

109. 1996 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் 100 மீட்டர் ஓட்டத்தில் சாதனை என்ன? நிகழ்த்தியவர் யார்?

9.84 வினாடிகள். ***டொனாவன் பெய்லி.*** (Donovan Bailey) கனடா வீரர்.

110. மூன்று ஒலிம்பிக் பந்தயங்களிலும் தொடர்ந்தாற்போல் மும்முறை தாண்டும் போட்டியில் (Triple Jump) வெற்றி பெற்ற வீரர் யார்?

***மியர் பிரின்ஸ்டின்*** என்னும் அமெரிக்க வீரர் (Myer Prinstin) வெற்றி பெற்ற ஆண்டுகள் 1900, 1904, 1908.

111. அமெரிக்க நாட்டைச் சேராத ஒருவர் ஒலிம்பிக் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்? அவர் யார்?

ஆர்மின் ஹேரி என்பவர்.

112. குத்துச் சண்டை வீரர் முகமது அலி இதற்கு முன் எந்தப்

**பெயரால் அழைக்கப்பட்டார்?**

கேசியஸ் மார்சிலஸ் கிளே (Cassius Marcellous Clay).

**113. இந்திய நீச்சல் வீரர் மிகர்சென், ஆங்கிலக் கால்வாயை எந்த ஆண்டு நீந்தினார்.**

1958 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ந்தேதி.

**114. கால் பந்தின் (Foot Ball) கனம், சுற்றளவு எவ்வளவு?**

கனம் 16 அவுன்சுக்கு மிகாமலும் 15 அவுன்சுக்குக் குறையாமலும்; சுற்றளவு 28 அங்குலத்திற்கு மிகாமலும் 27 அங்குலத்திற்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

**115. நீர்பந்தாட்டத்தில் (Water Polo) ஆடும் நீர்ப்பரப்பிற்குரிய ஆழம் எவ்வளவு?**

3 அடியிலிருந்து 6 அடிக்குள்ளாக இருக்க வேண்டும்.

**116. உலகத்தில் சதுரங்க ஆட்டம் அதிகமாக ஆடக்கூடிய நாடு என்று கருதப்படுவது எது?**

ரஷ்யா.

**117. உலக டென்னிஸ் போட்டிக்கான டேவிஸ் கோப்பையை (Davis Cup) வழங்கியவர் யார்?**

D.F. டேவிஸ் என்ற அமெரிக்கர்.

**118. டேவிஸ் கோப்பைக்கான உலக டென்னிஸ் போட்டி ஆட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

1900 ஆம் ஆண்டு.

**119. டென்னிஸ் ஆட்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டில்?**

1878 ஆம் ஆண்டு. கண்டு பிடித்தவர் மேஜர் வால்டர் கிளாப்டன் விங்பீல்டு (Major Walter Clopton Wing Field)

**120.மேஜர் விங்ஃபீல்டு டென்னிஸ் ஆட்டத்திற்கு முதன்முதலாகத் தந்திருந்த பெயர் என்ன?**

***ஸ்பேரிஸ்டிக்*** எனும் கிரேக்கச் சொல்லால் அமைந்த பெயர் (Spahristike) அதற்கு விளையாடு (To Play) என்பது பொருளாகும்.

**121.ஆங்கிலக் கால்வாயை அதிகத் தடவை நீந்திக் கடந்தவர் யார்?**

புரோஜன்தாஸ் (Brojen Das) எனும் பாகிஸ்தானியர். அவர் 1958 -1961க்குள்ளாக 6 முறை நீந்தியிருக்கிறார்.

**122.கைப்பந்தின் (Volley Ball) கனம், சுற்றளவு எவ்வளவு?**

பந்தின் கனம் 9 அவுன்சிலிருந்து 10 அவுன்சுக்குள்ளாக. பந்தின் சுற்றளவு 26 அங்குலத்திலிருந்து 26.8 அங்குலத்திற்குள்ளாக உள்ளது.

**123.1972 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் அதிக வெற்றிப் பதக்கங்கள் (Medals) வாங்கிய நாடுகளை வரிசைப்படுத்திக் கூறு?**

1. ரஷ்யா 2. அமெரிக்கா 3. மேற்கு ஜெர்மனி

**124.1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் எங்கே நடைபெற்றன?**

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில்.

**125.உலகத்தில் சிறந்த டென்னிஸ் வீரர் ஜான்போர்க்கின் சாதனை என்ன?**

அவர் ஐந்து முறை விம்பிள்டன் ஒற்றையர் பட்டத்தை வென்றிருக்கிறார்.

**126.100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களில் தொடர்ந்தாற்போல் வெற்றி பெற்ற வீராங்கனை யார்? எந்தெந்த ஆண்டுகள்?**

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ***யோமியோ டையஸ்*** (Wyomia Tyus) 1964, 1968 ம் ஆண்டுகளில் டோக்கியோவிலும் மெக்சிகோவிலும் நடந்த ஒலிம்பிக்கில்

வெற்றி பெற்றார்.

127. 6 அடி உயரத்திற்கு மேல் முதன்முதலாக உயரத் தாண்டலில் சாதனை செய்த வீரர், வீராங்கனையின் பெயர்களைக் கூறுக?

*ஜேம்ஸ் புரூக்ஸ்* (James Brooks) இங்கிலாந்துக்காரர். *அயலேந்தா பாலஸ்* (Iolanda Balas) ருமேனியா நாட்டினள்.

128. ஒரு நீச்சல் வீரர், ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் 7 போட்டிகளில் கலந்து கொண்டு, 7 போட்டிகளிலும் வெற்றி பெற்று, புதிய சாதனைகளை உண்டு பண்ணினார். அவர் யார்? எந்த ஒலிம்பிக்கில் செய்தார்?

*மார்க் ஸ்பிட்ஸ்* (Mark Spitz) எனும் அமெரிக்கர். 1972ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றார்.

129. பெண்களுக்கான குண்டு எறியும் போட்டியில் (Shot Put) உலக சாதனை என்ன? அவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? இதற்கு முந்திய குண்டு எறியும் நிகழ்ச்சியில் சாதனை என்ன?

*லயனா ஸ்லப்னகே* (Liona Slupinahe) மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர். அவர் எறிந்த தூரம் 22.41 மீட்டர். இப்போதுள்ள சாதனை 22.63 மீட்டர்

131. ஒலிம்பிக் பந்தயங்களில் இதுவரை இந்தியா எத்தனை வெற்றிப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறது?

தங்கப் பதக்கங்கள் 8. வெள்ளிப் பதக்கம் 1. வெண்கலப் பதக்கங்கள் 3. இவைகள் வளைகோல் பந்தாட்டத்திலும் டென்னிசிலும் பெற்றவைகளாகும்.

132. இந்தியாவின் விரைவோட்ட ராணி (Sprint Queen) என்று அழைக்கப்பட்டவர் யார்?

கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த ***நிர்மலா பொன்னப்பா.*** இவர் 5 முறை தொடர்ந்தாற்போல் வெற்றி பெற்றிருக்கிறார்.

133. யாராவது ஒலிம்பிக் பந்தயங்களில் நீளத்தாண்டும்

**போட்டியில் நான்கு முறை வெற்றி பெற்றிருக் கிறார்களா?**
***கார்ல் லூயிஸ்*** என்பவர் 4 முறை வென்றிருக்கிறார்.

**134. 1974 ஆம் அண்டு நடந்த உலகத் தங்கக் கோப்பைக்காக கால்பந்தாட்டப் போட்டியில் வென்ற நாடு எது?**
மேற்கு ஜெர்மனி. தொடர்ந்த நாடு ஹாலந்து.

**135. அகில உலகக் கால் பந்தாட்டத் தலைமைக் கழகம் (F.I.F.A) எந்த ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.**
1904ம் ஆண்டு.

**136. உலகக் கால்பந்தாட்டக் கழகத்தின் தற்போதைய தலைவர் யார்?**

ஜாவோ ஹேவலஞ்ச் (Javo Havelange)

**137. உலகக் கோப்பைக்கான (World Cup) உலகக் கால் பந்தாட்டப் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் பெறுகிறது?**

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை.

**138. உலகக் கிரிக்கெட் ஆட்டக்காரர்களில் அதிகமான சதங்கள் (Century) அடித்தவர் யார்? அவரது சாதனை (Record) என்ன?**

ஜேக் ஹாப்ஸ் (Jack Hobbs) என்பவர்

அவர் 1315 முறை ஆட்டங்களில் (Inning) 197 சதங்கள் எடுத்திருக்கிறார். மொத்த ஓட்டங்கள் 61237. அவர் ஆடிய ஆண்டுகள் 1905, 1934. அவர் எடுத்த ஓட்டங்களின் சராசரி 50, 65

**139. துலிப் கோப்பைக்கான கிரிக்கெட் தொடர் போட்டி ஆட்டம் (Duleep Trophy Tournament) முதன் முறையாக எந்த ஆண்டில் தொடங்கப் பெற்றது?**
1960-61ம் ஆண்டு நடக்கும் தொடர் போட்டி 'ஆட்ட காலத்தில்' (Season).

**140.துலிப் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இரட்டை சதம் எடுத்த நால்வர் பெயர்களைக் கூறுக?**

1. பட்டோடி 2. அஜித் வடேகர் 3. ஹனுமந்சிங்
4. அப்பாஸ் அலிபேக்

**141.சென்னைக்கும் இலங்கைக்கும் இடையே நடக்கும் கிரிக்கெட் போட்டிக்கு வழங்கப்படும் கேடயத்தின் பெயர் என்ன?**

கோபாலன் கேடயம் (Gopalan Trophy)

**142.கிரிக்கெட்டில் ஒரு பந்தெறி ஆட்டக்காரர் (Bowler) பந்து வீசி எறிவதற்காக எவ்வளவு தூரத்திலிருந்தேனும் ஓடி வரலாமா?**

அவர் ஓடி வரும் தூரம் 20 கெஜத்திற்கு மேலாக இருக்கக்கூடாது என்பது அகில உலகக் கிரிக்கெட் கழகம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விதியாகும்.

**143.இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களுக்கிடையே எத்தனை ஆண்டு இடைவெளி உண்டு (Period)?**

நான்கு ஆண்டுகள்.

**144.ரக்பி ஆட்டத்தில் ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள் உண்டு?**

15 ஆட்டக்காரர்கள். 8 முன்னாட்டக்காரர்கள்.
7 காப்பாளர்கள்.

**145.ரக்பி ஆட்டத்தில் மாற்றாட்டக்காரர்கள் எப்பொழுது ஆடு களத்தில் இறங்கி ஆடலாம்?**

ஆட்டம் தொடங்கிய பிறகு மாற்றாட்டக்காரர்கள் உள்ளே இறங்கி ஆட அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**146.கோல் ப் ஆட்டத்தில் ஒரு ஆட்டக்காரர் எத்தனை ஆட்டக் கம்புகளை (Clubs) எடுத்துச் செல்லலாம்?**

14 ஆட்டக் கம்புகள் மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதி உண்டு.

**147.ஒரு பந்தடி ஆட்டக்காரர் (Batsman) ஆட்டமிழந்து, மற்றொரு ஆட்டக்காரர் ஆடுவதற்காக உள்ளே**

போலவும் இருக்கும்.

155. **விளையாட்டுப் பந்தய வரலாற்றிலேயே நடைபெற்றிருக்கும் நெட்டோட்டத்தின் (Long Distance Race) அதிக தூரம் எவ்வளவு?**

3610 மைல் தூரம். இது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற மாகாணத்திற்கும் இடைப்பட்ட தூரம். அதைக் கடக்க எடுத்துக் கொண்ட நாட்கள் மார்ச்சு 21 லிருந்து ஜுன் 16 வரை. இது நடந்தது 1920ம் ஆண்டு.

156. **ஒலிம்பிக் பந்தயத்தில் மாரதான் நெட்டோட்டத்தைச் சேர்க்க அதிக முயற்சி எடுத்துக் கொண்டவர் யார்?**

***மைக்கேல் பிரில்*** (Michael Breal) என்பவர்.

157. **பழைய புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் எத்தனை நடைபெற்றிருக்கின்றன?**

குறைந்தது 315 இருக்கலாம் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

158. **ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களும் பங்கு பெறலாம் என்று எப்பொழுது முடிவெடுத்து பங்கு பெறச் செய்தனர்?**

1928ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் பந்தயங்கள் நடந்தபோது.

159. **அப்பொழுது நடத்தப்பெற்ற போட்டி நிகழ்ச்சிகள் யாவை?**

100 மீட்டர் ஓட்டம். 800 மீ ஓட்டம் தொடரோட்டம் (Relay). உயரத் தாண்டல், தட்டெறிதல்.

160. **பெண்களுக்கான ஐவகைப் போட்டிகள் (Pentathion) யாவை?**

போலவும் இருக்கும்.

**155. விளையாட்டுப் பந்தய வரலாற்றிலேயே நடைபெற்றிருக்கும் நெட்டோட்டத்தின் (Long Distance Race) அதிக தூரம் எவ்வளவு?**

3610 மைல் தூரம். இது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் இருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற மாகாணத்திற்கும் இடைப்பட்ட தூரம். அதைக் கடக்க எடுத்துக் கொண்ட நாட்கள் மார்ச்சு 21 லிருந்து ஜுன் 16 வரை. இது நடந்தது 1920ம் ஆண்டு.

**156. ஒலிம்பிக் பந்தயத்தில் மாரதான் நெட்டோட்டத்தைச் சேர்க்க அதிக முயற்சி எடுத்துக் கொண்டவர் யார்?**

***மைக்கேல் பிரில்*** (Michael Breal) என்பவர்.

**157. பழைய புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் எத்தனை நடைபெற்றிருக்கின்றன?**

குறைந்தது 315 இருக்கலாம் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

**158. ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களும் பங்கு பெறலாம் என்று எப்பொழுது முடிவெடுத்து பங்கு பெறச் செய்தனர்?**

1928ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் நகரில் பந்தயங்கள் நடந்தபோது.

**159. அப்பொழுது நடத்தப்பெற்ற போட்டி நிகழ்ச்சிகள் யாவை?**

100 மீட்டர் ஓட்டம். 800 மீ ஓட்டம் தொடரோட்டம் (Relay). உயரத் தாண்டல், தட்டெறிதல்.

**160. பெண்களுக்கான ஐவகைப் போட்டிகள் (Pentathion) யாவை?**

1. 100 மீட்டர் தடை தாண்டி ஓட்டம் (Hurdles) 2. குண்டெறிதல் 3. உயரத்தாண்டல் 4. நீளத்தாண்டல் 5. 200 மீ. விரைவோட்டம்.

**161. இந்த ஐவகைப் போட்டிகள் எந்த ஆண்டு ஒலிம்பிக் கழகத்தால் ஏற்று பந்தயங்களுடன் இணைக்கப்பட்டன?**

1964 ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில்

**162. உலகிலேயே நீங்கள்தான் பெரிய உடலாளர் (Great Athlete) என்று புகழப்பட்டவர் யார்? புகழ்ந்தவர் யார்?**

புகழ்ந்தவர் ஸ்வீடன் தேசத்து அரசர். புகழப்பட்டவர் ***ஜீம் தோர்ப்* (Jim Thorpe)** என்ற அமெரிக்க வீரர். நடந்த இடம் 1912ம் ஆண்டு ஸ்டாக்கோம் என்ற இடத்தில் ஒலிம்பிக் பந்தயம் நடைபெற்றபோது.

**163. 1896ல் முதன்முதல் கிரேக்கத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் மாரதான் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர் யார்?**

***ஸ்பிரிடன் லூயிஸ்* (Spirdon Louis)** எனும் கிரேக்கர்.

**164. ரஷ்யர்களால் ஒலிம்பிக் ராணி (Olympic Queen) என்று புகழப் பெற்ற வீராங்கனை யார்? அவரது வெற்றி சாதனை என்ன?**

***வில்மா ருடால்ஃப்* (Wilma Rudalph)** 100 மீ. 200 மீ விரைவோட்டங்களில் வெற்றிபெற்று, 400மீ தொடர் ஓட்டப் போட்டியிலும் தங்கப் பதக்கங்கள் பெற்றார்.

**165. உலக நாடுகளுக்கிடையே நடக்கின்ற, உலகக் கால் பந்தாட்டத்திற்கான (World Cup) வெற்றிக் கேடயத்தைத் தந்துதவியவர் பெயர் என்ன?**

பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவரான **M. ஜூலீஸ் *ரிமெட்*** என்பவர் (M.Jules Rimet).

போட்டியில் வென்ற இளைஞர் யார்?

சென்னையைச் சேர்ந்த M. ஆரன் (M.Aoran)

178. 'லாக்ரோசி' என்று ஒரு ஆட்டத்திற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?

லாக்ரோசி ஆட்டத்தில் பயன்படும் குச்சியானது கிறிஸ்துவ மதக் குருத் தலைவரான பிஷப் வைத்திருக்கும் கைத்தடியின் அமைப்புடையதாக இருந்ததால் தான் அந்தப் பெயரை வைத்திருக்கின்றனர்.

179. மல்யுத்தப் போட்டி நடத்துவதற்குரிய மேடையின் (Mat) அளவு என்ன?

அகில உலக போட்டி என்றால் கட்டாயமாக 6 மீ x 6மீ இருக்க வேண்டும். ஒலிம்பிக் பந்தயங்கள் மற்றும் உலகப் போட்டிக்கு 8 மீ x 8 மீ பரப்பளவு இருக்குமாறு அமைத்துக் கொள்கிறார்கள்.

180. சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனைத்துக் கல்லூரிகளுக்கும் இடையே (Inter Divisional) நடக்கும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்திற்கு வழங்கப்படும் கேடயத்தின் பெயர் என்ன?

டங்கன் கேடயம் (Duncon Trohy).

181. ஒரு 'முறை ஆட்டம்' (Inning) ஆடிக் கொண்டிருக்கும் போது, நடுவில் புதிய பந்தை எப்பொழுது வேண்டு மானாலும் மாற்றிக் கொள்ளலாமா?

பந்தெறி தவணைகளில் (Over) 75 லிருந்து 85க்குள்ளாக எப்பொழுது வேண்டுமானாலும் புதிய பந்தினை மாற்றிக் கொள்ளலாம். பந்தெறி தவணை 75க்குள் இருந்தால் அல்லது 85க்கு மேல் போய் விட்டால் பந்தை மாற்றிக் கொள்ள முடியாது.

182. 1979ம் அண்டு மியூனிச் ஒலிம்பிக் பந்தயத்தில்

எல்லைக் கோட்டுக்கு வெளியே போய் விழுமாறு பந்தை ஒரு பந்தடி ஆட்டக்காரர் அடித்து விட்டால், அதற்கு 6 ஓட்டங்கள் என்பதைக் குறிக்கத்தான் அந்த சைகை.

**171. குத்துச் சண்டையில் கையுறையை (Gloves) விரித்தபடி (Open) எதிரியைக் குத்தலாமா?**

அப்படி சண்டையிடக் கூடாது. அது தவறாகும்.

**172. இந்தியாவின் விளையாட்டு வீரராக உலக பிலியர்ட்ஸ் ஆட்டத்தில் கலந்து கொண்டவர் யார்? எப்பொழுதாவது வென்றிருக்கிறாரா?**

***வில்சன் ஜோன்ஸ்*** என்பவர். இவர் 2 முறை 'உலக வெற்றி வீரராக' (World Champion) வந்திருக்கிறார்.

**173. வில்சன் ஜோன்ஸ் இந்திய வெற்றி வீரராக எத்தனை முறை வெற்றி பெற்றிருக்கிறார்?**

12 முறை தேசிய வெற்றி வீரராக (National Champion) வெற்றி வீரர் விருதினைப் பெற்றிருக்கிறார்.

**174. ஆங்கிலக் கால்வாயை முதன் முதலாக நீந்திக் கடந்த ஆசியப் பெண்மணி யார்?**

இப்பொழுது 'குப்தா' என்று அழைக்கப்படும் 'ஆர்டிசாகா' (Artisaha) என்பவர். மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்.

**175. இந்திய நீச்சல் தலைமைக் கழகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

1948ம் ஆண்டு.

**176. அகில உலக சதுரங்கக் கழகத்தின் தலைவர் யார்?**

***டாக்டர் மாக்ஸ் ஈவ்*** (Dr. Max Evwe)

**177. இந்திய தேசிய இளைஞர் சதுரங்க ஆட்டத்தில் முதல் தொடராட்டப் போட்டி சென்னையில் நடந்த**

**போட்டியில் வென்ற இளைஞர் யார்?**

சென்னையைச் சேர்ந்த M. ஆரன் (M.Aoran)

**178. 'லாக்ரோசி' என்று ஒரு ஆட்டத்திற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?**

லாக்ரோசி ஆட்டத்தில் பயன்படும் குச்சியானது கிறிஸ்துவ மதக் குருத் தலைவரான பிஷப் வைத்திருக்கும் கைத்தடியின் அமைப்புடையதாக இருந்ததால் தான் அந்தப் பெயரை வைத்திருக்கின்றனர்.

**179. மல்யுத்தப் போட்டி நடத்துவதற்குரிய மேடையின் (Mat) அளவு என்ன?**

அகில உலக போட்டி என்றால் கட்டாயமாக 6 மீ x 6மீ இருக்க வேண்டும். ஒலிம்பிக் பந்தயங்கள் மற்றும் உலகப் போட்டிக்கு 8 மீ x 8 மீ பரப்பளவு இருக்குமாறு அமைத்துக் கொள்கிறார்கள்.

**180. சென்னைப் பல்கலைக் கழகத்தின் அனைத்துக் கல்லூரிகளுக்கும் இடையே (Inter Divisional) நடக்கும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்திற்கு வழங்கப்படும் கேடயத்தின் பெயர் என்ன?**

டங்கன் கேடயம் (Duncon Trohy).

**181. ஒரு 'முறை ஆட்டம்' (Inning) ஆடிக் கொண்டிருக்கும் போது, நடுவில் புதிய பந்தை எப்பொழுது வேண்டு மானாலும் மாற்றிக் கொள்ளலாமா?**

பந்தெறி தவணைகளில் (Over) 75 லிருந்து 85க்குள்ளாக எப்பொழுது வேண்டுமானாலும் புதிய பந்தினை மாற்றிக் கொள்ளலாம். பந்தெறி தவணை 75க்குள் இருந்தால் அல்லது 85க்கு மேல் போய் விட்டால் பந்தை மாற்றிக் கொள்ள முடியாது.

**182. 1979ம் அண்டு மியூனிச் ஒலிம்பிக் பந்தயத்தில்**

**வளைகோல் பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற நாடு எது? அது எந்த நாட்டைத் தோற்கடித்தது?**

வென்ற நாடு - மேற்கு ஜெர்மனி. தோற்றநாடு பாகிஸ்தான்.

183. **வளைகோல் பந்தாட்டத்தில் சிறந்த ஆட்டக்கார நாடுகள் சிலவற்றைக் கூறுக.**

இந்தியா 1928லிருந்து 1960 வரை வென்று உலகத் தலைமை வகித்த நாடு. தங்கப் பதக்கத்தை 1980 லும் வென்றது.

பாகிஸ்தான். இந்தியாவை பலமுறை வென்றாடு.

மேற்கு ஜெர்மனி. 1972 ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற நாடு.

ஹாலந்து 1978 ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற நாடு.

184. **பத்மஸ்ரீ பட்டம் பெற்ற முதல் வளைகோல் பந்தாட்ட வீரர் யார்? எந்த ஆண்டு அவர் அந்த விருதினைப் பெற்றார்?**

பல்பீர்சிங். விருந்து பெற்ற ஆண்டு 1957.

185. **சுப்ராடோ கோப்பை (Suboroto Cup) எந்தப் பந்தாட்டப் போட்டிக்காகத் தரப்படுகிறது?**

இந்தியாவில் உள்ள பள்ளி மாணவர்களுக்கிடையே நடக்கும் (மாநிலத்தில் முதலாவதாக வெற்றி பெற்ற பள்ளிகளுக்குள்ளே) அகில இந்தியப் பள்ளி மாணவர்களின் கால் பந்தாட்டப் போட்டிக்கான கோப்பையாகும்.

186 **'ரோவர்ஸ் கோப்பை' எந்தப் பந்தாட்டப் போட்டிக்கு வழங்கப்படுகிறது?**

கால் பந்தாட்டத்திற்கு

187.தேசியக் கால் பந்தாட்டத்தில் வெற்றி பெறும் குழுவிற்கு (National Foot Ball Championship) வழங்கப்படும். வெற்றிக் கோப்பையின் பெயர் என்ன?

சந்தோஷ் கோப்பை.

188.இந்திய ஒலிம்பிக் கழகத்தின் முதல் தலைவர் யார்?

***சர் தொராப்ஜி டாடா*** (Sir Dorabji Tata)

189.பறக்கும் பின்லாந்துக்காரர் (Flying Finn) என்று புகழப் பட்டவர் யார்? ஏன் அவர் அவ்வாறு புகழப்பட்டார்?

அவரது பெயர் ***பாவோநர்மி*** (Paavo Nurmi) அவர் ஓட்டத்தில் உண்டாக்கிய உலக சாதனைகள்: 1500 மீ. 1000 மீ. 3000 மீ. 5000 மீ. 10,000மீ 20,000 மீ 1 மைல், 2 மைல்,

190.நான்கு ஒலிம்பிக் பந்தயங்களில் தொடர்ந்தாற்போல் தட்டெறியும் போட்டியில் (Discuss) வென்று ஒலிம்பிக் சாதனையை ஏற்படுத்தியவர் யார்? வென்ற ஆண்டுகளையும் கூறுக.

ஆல்பிரட் ஓர்ட்டர் (Alfred Oertor) எனும் அமெரிக்கர். ஒலிம்பிக்கில் அவர் வென்ற ஆண்டுகள் 1956. 1960. 1964. 1968.

191. 20,000 மீட்டர் நடைப்போட்டி ஒலிம்பிக் பந்தயத்தில் எந்த ஆண்டு இணைக்கப்பட்டது?

1956ம் ஆண்டு மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் இணைக்கப்பட்டது.

192. இந்திய விளையாட்டுப் போட்டியில் (Athletics) இரண்டு விரைவோட்டப் போட்டிகளிலும் (Sprints) அதாவது 100 மீ. 200 மீ) முதன் முதலாக வெற்றி பெற்ற வீரர் யார்? எந்த ஆண்டுகளில்?

***ஆர்.பர்னஸ்*** என்பவர். வங்காளத்தைச் சேர்ந்தவர்.

வென்ற ஆண்டு 1924ல்.

193. **1974ம் ஆண்டு டெக்ரானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் டெகாதலனில் (Decathlon) வெற்றி பெற்றவர் யார்? அவரது சாதனை என்ன?**

***விஜய்சிங் சௌகான்*** (Vijay Singh Chaukan) இந்திய வீரர். அவரின் புதிய வெற்றிச் சாதனை 7375 வெற்றி எண்கள்.

194. **முதல் ஆசிய விளையாட்டுப் போட்டியில் மாரதான் ஓட்டத்தில் வென்ற இந்திய வீரர் யார்?**

***சோட்டாசிங்*** (Choata Singh).

195. **இந்திய தேசிய விளையாட்டுப் போட்டிகளில் விரைவோட்டங்களில் (Sprints) அதிக முறை வென்ற வீரர் யார்? எத்தனை முறை?**

பம்பாயைச் சேர்ந்த '***லெவி பின்டோ***' (Lavy Pinto). 6 தடவை

196. **எந்தெந்த ஆண்டுகளில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடைபெறாமல் நின்று போயின? ஏன்?**

1916 ல் முதல் உலக மகாயுத்தம் வந்ததால் 6 வது ஒலிம்பிக் பநதயமும், 1940, 1944ல் இரண்டாம் உலக மகாயுத்தம் வந்ததால் 12 வது 13 வது ஒலிம்பிக் பந்தயங்களும் நடைபெறாது நின்று போயின.

197. **புதிய ஒலிம்பிக் பந்தயம் துவங்க மூல காரணமாக இருந்தவர் யார்?**

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ***பியரி கூபர்ட்டின்*** (Pierc De Coubertin)

198. **ஒலிம்பிக் பந்தயத்தின் குறிக்கோள் (Motto) என்ன?**

விரைக. (Faster) உயர்க (Higher) வலிமை (Stronger).

199. உலகச் சதுரங்கப் போட்டியில் அதிகமுறை தொடர்ந்து வெற்றி பெற்ற நாடு எது?

ரஷ்யா

200. 'ஓடும் மனித எந்திரம்' என்று புகழப்பட்ட செக்கோஸ்லோவோவின் நீண்ட தூர ஓட்டக்காரர் யார்?

எமில் செட்டபெக் (Emil Zatopek)

201. சென்னையில் உள்ள சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஆடப்படும் ஆட்டத்தின் பெயர் என்ன?

கிரிக்கெட்

202. விம்பிள்டன் என்றதும் உடனே நினைவுக்கு வரும் ஆட்டத்தின் பெயர் என்ன?

டென்னிஸ்

203. இங்கிலாந்தில் கிரிக்கெட் ஆடப்படுகின்ற முக்கிய மைதானங்கள் எவை? பெயர்களைக் கூறுக?

லார்ட்ஸ் (Lords), ஓவல் (Oval), லீட்ஸ் (Leeds)

204. அமெரிக்காவில் வணிகமுறை குத்துச் சண்டைப் போட்டி நடத்துவதற்கென்றே அமைந்துள்ள இடத்தின் பெயர் என்ன?

நியூயார்க்கில் உள்ள மேடிசன் சதுக்கத் தோட்டம் (Madisan Square Garden)

205. முகமது அலி யாரை வென்று உலகக் குத்துச் சண்டை வீரர் என்று (1974 ஆம் ஆண்டு) பட்டம் பெற்றார்? எங்கே?

சாயிரா (Zaire) எனும் நாட்டில் 'கின்ஷாசா' (Kinshasa) எனுமிடத்தில் நடந்த போட்டியில், ஜார்ஜ்ஃபோர்மனைத் தோற்கடித்து, இந்தப் பட்டத்தைப் பெற்றார்.

**206. வெறுங்கையால் குத்திக் கொள்ளும் குத்துச் சண்டைப் போட்டி கடைசி தடவையாக யார் யாருக்கு நடந்தது? எங்கே? எப்பொழுது?**

ஜான் சுலீவனுக்கும் (John Sullivan), ஜேக் கிஜ்ரேனுக்கும் (Jake Kjirain) 1899 ம் ஆண்டு சூலை மாதம் 8ம் தேதி அமெரிக்காவில் உள்ள 'ரிச்பார்' என்னும் இடத்தில் நடைபெற்றது.

**207. 1974-75 ஆம் ஆண்டில் உலக பிலியர்ட்ஸ ஆட்ட வெற்றி வீரர் யார்?**

இலங்கையைச் சேர்ந்த ***'முகமது லபீர்'*** (Mohommed Laffir).

**208. ஒலிம்பிக் பந்தயங்களில் பெண்களுக்காக எத்தனைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன?**

18 போட்டிகள்

**209. அவைகள் என்னென்ன?**

100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர், 1500 மீட்டர், 3,000 மீட்டர், 10,000 மீட்டர், 400 மீ தொடரோட்டம், 1500 மீ தொடரோட்டப் போட்டி. 100 மீட்டர் தடை ஓட்டம். நீளத் தாண்டல், உயரத் தாண்டல், இரும்புக் குண்டு எறிதல், தட்டெறிதல், வேலெறிதல், ஏழுவகை பந்தயங்கள் (Heptathlon)

**210. ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெறுவதற்காக, இந்தியா தனது வீரர்களை எந்த ஆண்டு அனுப்பி வைத்தது?**

1928ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) என்னும் இடத்தில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்திற்கு.

**211. ஒலிம்பிக் பந்தயத்தில் சீனா எந்த ஆண்டு பங்கு பெற்றது? எத்தனை வீரர்களை சீனா அனுப்பியது?**

1932ம் ஆண்டு. அனுப்பப்பட்டவர் ஒரே ஒருவர்தான்.

212. **1972 ஆம் ஆண்டு மியூனிக்கில் நடந்த ஒலிம்பிக் பந்தயங்களில் வழங்கப்பட்ட மொத்த வெற்றிப் பதக்கங்கள் (Medals) எவ்வளவு?**

1109 பதக்கங்கள்.

213. **அதில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் எவ்வளவு?**

தங்கப் பதக்கங்கள் 364. வெள்ளிப் பதக்கங்கள் 384. நடந்த போட்டிகள் 21 நிகழ்ச்சிகள்.

214. **இரண்டு ஒலிம்பிக் பந்தயக் கால் பந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து வென்று தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறது. எந்தெந்த ஆண்டுகளில்?**

1908, 1912 ம் ஆண்டுகளில்.

215. **ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா இரண்டு முறை கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றிருக்கிறது? எந்தெந்த ஆண்டுகளில்?**

1951, 1962ம் ஆண்டுகளில்.

216. **ஒறுநிலை உதை விதி (Penalty -Kick-Rule) எப்பொழுது கால் பந்தாட்டத்தில் புகுத்தப்பட்டது?**

1891ம் ஆண்டு.

217. **பந்தடி ஆட்டக்காரருக்கு (Batsman) வெகு அருகாமையில் நின்று பந்தைத் தடுத்தாடுவதில் (Closed in Field) வல்லமையுள்ளவராக இருந்து ஆடிய இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர் யார்?**

***ஏகநாத் சோல்கர்*** (Ekanath Solker)

218. **ரஞ்சித் கோப்பையை யார் எந்த ஆண்டு எதற்காக**

**வழங்கி நிறுவினார்?**

மாநிலங்களுக்கிடையே நடக்கின்ற கிரிக்கெட் போட்டிக்கு வழங்குவதற்காக, உலக சிறந்த ஆட்டக்காரராக விளங்கிய ரஞ்சித் சிங்கின் நினைவாக, பாட்டியாலா மகாராஜா 1964ம் ஆண்டு வழங்கினார் (Presented).

219. **குத்துச் சண்டைப் போட்டியில், எதிராளியின் இடுப்பிற்குக் கீழே குத்தலாமா? (Below the Belt)**

குத்தக் கூடாது. குத்தினால் தவறாகும். அது குத்திய ஆட்டக்காரரை சண்டையை விட்டு நீக்கி வைக்கத்தக்க அளவுக்குரிய பெருந்தவறாகும் (Disqualify), இடுப்பிற்குக் கீழ் என்றால் தொப்புளைச் சுற்றி அவர் கட்டியுள்ள பெல்டுக்குக் கீழே உள்ள பகுதியாகும். அங்கே குத்தக்கூடாது.

220. **குத்துச் சண்டைப் போட்டியில் பணியாற்றிய முதல் பெண் நடுவர் யார்?**

***கரோல் பாலிஸ்*** (Carol Polis).

221. **அவர் எந்தப் போட்டியில் யார் யாருக்குமிடையே நடந்த போட்டியில் பணியாற்றினார்?**

நியூயார்க்கில் உள்ள மேடிசன் ஸ்கொயர் கார்டனில் பாபி அலெக்சாண்டர் அல்போன்ஸ் டெயிலர் இருவருக்கும் இடையே நடந்த போட்டியில்.

222. **50 வயதைக் கடந்த பாபிரிக்ஸ் என்பவர் பந்தயம் கட்டிக் கொண்டு இரண்டு விம்பிள்டன் டென்னிஸ் வீராங்கனைகளுடன் விளையாடினார்? அவர்கள் யார் யார்?**

***மார்கரேட் கோர்ட்*** (Margaret Court).

***பில்லி ஜீன் கிங்*** (Bille Jean King).

**223. அவற்றின் முடிவு என்ன?**

பாபிரிக்ஸ், மார்கரேட் கோர்ட்டைத் தோற்கடித்து பில்லி ஜீன் கீங்கிடம் தோற்றார்.

**224. வையிட்மேன் கோப்பை எந்த ஆட்டத்திற்காக, எந்த ஆண்டு வழங்கப்பட்டது?**

டென்னிஸ் ஆட்டம். வழங்கிய ஆண்டு 1923ம் ஆண்டு.

**225. உலகத்தில் சிறந்த டென்னிஸ் ஆட்ட வீராங்கனைகள் ஐவரைக் கூறுக.**

1. பில்லி ஜீன்கிங் 2. கிரைஸ் எவர்ட் (இருவரும் அமெரிக்கர்கள்) 3. இவான் கூலகாங் 4. மார்கரேட் கோர்ட் (இருவரும் ஆஸ்திரேலியர்கள்) 5. மார்டினா நவராட்டிலோவா (அமெரிக்கர்).

**226. 1997ம் ஆண்டில் உலகில் சிறந்த விராங்கனைகள் யார்?**

1. மார்ட்டினா ஹிஞ்சிஸ் 2. வீனஸ் வில்லியம்ஸ் 3. மோனிகா செலிஸ் 4. அரண்ட்ஷா சாஞ்சஸ் விக்காரியோ 5. மார்ட்டினா நவோட்டினா

**227. 1975ஆம் ஆண்டு நடந்த உலக மேசைப் பந்தாட்டப் போட்டியில் வென்ற பெண்மணி யார்?**

வடகொரியாவைச் சேர்ந்த ***யங்சன்கிம்*** (Yungsunkim)

**228. யங்சனன் கிம் செய்த பெரிய சாதனை என்ன?**

***யங்சன் கிம்*** 18 வயதுள்ள ஒரு பள்ளி மாணவி, முதல் முறையாக உலகப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றது பெரிய சாதனைதானே!

**229. உலக மேசைப் பந்தாட்ட கழகத்தின் தலைவர் யார்?**

***இவோர் மாண்டேகு*** (Ivor Montague)

**230. முதல் அகில உலக கூடைப் பந்தாட்டப் போட்டி எந்த ஆண்டு எந்த இடத்தில் நடைபெற்றது?**

1950 ம் ஆண்டு அர்ஜென்டினாவில் உள்ள பூனாஸ் ஏரிஸில் (Bunenos Aires) நடைபெற்றது?

**231. கூடைப் பந்தாட்டப் போட்டிக்குரிய மொத்த ஆட்ட நேரம் எவ்வளவு?**

ஒவ்வொரு பருவத்திற்கும் 20 நிமிடமாக, 2 பருவம் ஆட மொத்த ஆட்ட நேரம் 40 நிமிடங்கள். இடைவேளை 10 நிமிடம்.

**232. கால் பந்தாட்டப் போட்டிக்குரிய மொத்த ஆட்ட நேரம் எவ்வளவு?**

ஒவ்வொரு பருவம் (Half) 45 நிமிடங்களாக இரண்டு பருவம். ஆட மொத்தம் 90 நிமிடங்கள்.

**233. வளைகோல் பந்தாட்டத்தின் போட்டிக்குரிய மொத்த ஆட்ட நேரம் எவ்வளவு?**

ஆட்ட மொத்த நேரம் 70 நிமிடம். 2 பருவங்கள். பருவம் ஒன்றக்கு 35 நிமிடங்கள்.

**234. கிரிக்கெட் ஆட்டம் (Inning) தொடங்குவதற்கு முன் எத்தனை முறை பந்தெறிந்து பழகுவதற்கு அல்லது புது பந்தாட்டக்காரர் (Batsman) வருவதற்கு முன் (Bowling Practice) எறிந்து பழக அனுமதி உண்டா?**

அதுபோன்ற பழக்கமே கிடையாது.

**235. ஒலிம்பிக் பந்தயத்தில் கைப்பந்தாட்டம் தொடங்கி முதன்முறையாக அந்தப் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?**

ரஷ்யா.

**236. முதன் முதலாக உலக டென்னிஸ் போட்டியான டேவிஸ் கோப்பைக்கான போட்டி எங்கே எப்போது நடைபெற்றது?**

1900ம் ஆண்டு பாஸ்டனில் (Boston).

**237. கூடைப் பந்தாட்டத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஆட்டக்காரர்களுக்குக் குறைவாக இருந்து ஆடலாமா?**

ஆட்டத் தொடக்கத்தில் 5 ஆட்டக்காரர்கள் கட்டாயம் இருக்க வேண்டும். இடையில் மாற்றிக் கொள்ள மாற்றாட்டக்காரர்கள் இல்லாமற் போனால், இருக்கும் ஆட்டக்காரர்களை அதாவது 5க்கும் குறைவாக இருந்தால் கூட அவர்களை வைத்துக் கொண்டுதான் ஆட்டத்தை ஆடி முடிக்க வேண்டும்.

**238. இறகுப் பந்தின் (Shuttle Cock) நீளம், கனம் என்ன?**

கனம் 73 லிருந்து 85 குன்றிமணி எடை (Grams)

நீளம் $2\frac{1}{2}$ '' லிருந்து $2\frac{3}{4}$ '' அங்குலம் வரை.

**239. இறகுப் பந்தாட்டத்தின் வலை உயரம் என்ன?**

கம்பங்களருகில் 5' 1'' நடுவில் வலையின் உயரம் 5 அடி.

**240. டெகாதலான் போட்டியிலும் தனிப்பட்ட உயரத் தாண்டும் போட்டியிலும் ஒரே ஒலிம்பிக்கில் ஒரே ஒரு வீரர்தான் தங்கப் பதக்கங்கள் பெற்றார்? அவர் யார்? எந்த ஆண்டில்?**

அந்த வீரர் பெயர் ***ஹெரால்டு ஆஸ்பான்*** (Herald Osborn) அமெரிக்கர். 1924ம் ஆண்டு ஒலிம்பிக்கில் இவ்வாறு வெற்றி பெற்றார்.

**241. இந்திய தேசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு ஆண்டுகள் 2 விரைவோட்டங்களில் (100 மீ 200 மீ) வெற்றி பெற்ற வீராங்கனை யார்? எந்த ஆண்டில்?**

***டெய்சி பாட்லால்*** (Daisy Badlal) பம்பாயைச் சேர்ந்தவர் (1942, 1944)

**242. பத்தாயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயம் ஓடிக் கொண்டிருக்கிறபொழுது தவறிக் கீழே விழுந்து, பின் எழுந்து ஓடி முதலாவதாக வந்து ஒலிம்பிக் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கிறார் ஒருவர். அவர் பெயர் என்ன?**

பின்லாந்துக்காரரான (Finland) அவரின் பெயர் ***லாசி வீரன்*** (Lase Viren)

**243. இரண்டு ஒலிம்பிக் பந்தயங்களிலும் தொடர்ந்தாற் போல் கோலூன்றித் தாண்டும் போட்டியில் (Polevault) வெற்றி பெற்ற வீரர் யார்?**

***ராபர்ட் ரிச்சர்ட்ஸ்*** என்பவர். வென்ற ஆண்டுகள் 1952, 1956.

**244. அமெரிக்கா இதுவரை எத்தனை முறை ஒலிம்பிக் பந்தயங்கள் நடத்துகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது?**

நான்கு தடவைகள்.

**245. அமெரிக்காவில் ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்த இடங்களையும் ஆண்டுகளையும் கூறு?**

1904 செயின்ட் லூயிஸ்

1932ல் லாஸ் ஏஞ்செலிஸ்

1968ல் மெக்சிகோ

1996. அட்லாண்டா

**246. 1896ல் தொடங்கிய ஒலிம்பிக் பந்தயம் சிறப்புற வளர்ந்திருக்கிறதா? அதற்கு உலக நாடுகளுக்கிடையே**

**வரவேற்பும் இருக்கிறதா?**

ஆமாம். 1896ல் பங்கு பெற்ற நாடுகள் 13. பங்கு பெற்ற வீரர்கள் 484. 1972ல் பங்கு கொண்ட நாடுகள் 126 பங்கு பெற்ற வீரர்கள் 9000. 1996ல் 197 நாடுகள். 10,800 போட்டியாளர்கள். 5000 அதிகாரிகள்.

**247. மேற்கு ஜெர்மனியில் அமைந்த ஒலிம்பிக் கிராமத்தில் ஒரு இந்திய விளையாட்டு வீரரின் பெயரில் ஒரு தெருவிற்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய பெருமை பெற்ற இந்திய விளையாட்டு வீரர் யார்?**

***ரூப் சிங்.*** (Roop Singh) இவர் வளைகோல் பந்தாட்டத்தில் 1932, 1936 ல் விளையாடி தங்கப் பதக்கங்கள் பெற்றவர்.

**248. ஒலிம்பிக் ஓடுகளப் போட்டியில் பெண்களுக்கான போட்டியில் 4 தங்கப் பதக்கங்களை வென்ற பெண்மணி யார்?**

டச்சு நாட்டைச் சேர்ந்த ***மேரி பிளாங்கர்ஸ் கோயன்.***

**249. இவர் வெற்றி பெற்ற நிகழ்ச்சிகள் யாவை? சாதனைகள் என்ன?**

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பிறகு இவர் செய்த சாதனைகள்

100 மீட்டர் ஓட்டம் 11.9 வினாடி

200. மீட்டர் ஓட்டம் 24.4. வினாடி

80 மீட்டர் தடை தாண்டி ஓட்டம் 11.2 வினாடி

400 மீட்டர் தொடரோட்டம்.

250. 4 x 400 மீ தொடரோட்டப் போட்டி பெண்களுக்காக

**எந்த ஆண்டு ஒலிம்பிக்கில் இணைக்கப்பட்டது?**

1976ம் ஆண்டு மியூனிக் ஒலிம்பிக்கில்

**251. ஒலிம்பிக் பந்தயத்தில் ரஷ்யா கால் பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்று இருக்கிறதா?**

1956ம் ஆண்டில் வெற்றி பெற்றிருக்கிறது.

**252. உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி 1978 ஆம் ஆண்டு எங்கே நடைபெற்றது?**

அர்ஜென்டினாவில் (Argentina).

**253. ஒலிம்பிக்கில் நடக்கும் கால் பந்தாட்டப் போட்டியில் இந்தியா எந்த ஆண்டு கலந்து கொண்டது?**

1948ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பொழுது.

**254. விஸ்ஸி கோப்பைக்கான (Vizzi Cup) கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் அதிக அளவு ஓட்டங்கள் எடுத்தவர் யார்?**

***கவாஸ்கர்*** 247 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

**255. ரஞ்சித் கோப்பைக்கான போட்டியில் குறைந்த அளவு ஓட்டங்கள் எடுத்துத் தோற்ற மாநிலம் எது?**

சதர்ன் பஞ்சாப். அதன் மொத்த ஓட்டங்கள் 25 தான். இது 1934ம் ஆண்டில் அமிர்தசரசில் நடந்த போட்டியின் போதாகும்.

**256. சாம்பல் (Ashes) என்று அழைக்கப்படும் பெரும்மிகு விருதுக்காகப் போட்டியிட்டு கிரிக்கெட் ஆடும் நாடுகள் எவை?**

இங்கிலாந்தும் ஆஸ்திரேலியாவும்.

**257. இந்தியக் கிரிக்கெட் குழுவிற்குத் தந்தையும் தனயனும் குழுத் தலைவர்களாக இருந்து**

**விளையாடியிருக்கின்றனர். அவர்கள் யார்?**

பட்டோடி இட்டிகர் அலி (தந்தை)

பட்டோடி மன்சூர் அலி (தனயன்)

258. **இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நடந்த டெஸ்ட் ஆட்டங்களில் இந்தியா எடுத்த குறைந்த ஓட்டங்கள் எவ்வளவு?**

9 விக்கெட் இழந்து 9 ஓட்டங்கள் எடுத்து ஆடியது போதும் என்று (Declare) அறிவித்து விட்டது. இது 1966ம் ஆண்டு சென்னையில் நடந்த 4 வது டெஸ்ட் ஆட்டத்திலாகும்.

259. **வளைகோல் பந்தாட்டத்தை ஒலிம்பிக்கில் முதன்முறையாகப் புகுத்தியபோது எத்தனை நாடுகள் பங்கு கொண்டன.**

ஆறே நாடுகள்தான்.

260. **அந்த நாடுகள் எவ்வ?**

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ்.

261. **பெய்டன் கோப்பை (Beighton Cup) எந்த ஆட்டத்திற்காக வழங்கப்படுகிறது?**

வளைகோல் பந்தாட்டத்திற்காக.

262. **கமலா ராமானுஜம் கோப்பை எந்த ஆட்டத்திற்கு உரியது?**

மேசைப் பந்தாட்டத்திற்கு.

263. **தற்பொழுது உயரத் தாண்டலில் உள்ள உலக சாதனை என்ன?**

2.36 மீட்டர் உயரம். இதனைத் தாண்டி சாதித்தவர் **ஜெர்டு வெசிக்** (Gerd Wessig) எனும் மேற்கு ஜெர்மனியர்

1980ம் ஆண்டு மாஸ்கோ ஒலிம்பிக்கில் தாண்டினார். தற்போது கியூபா நாட்டினர் ஜே. சாட்டோ மேயர். இவரின் உலக சாதனை உயரம் 2.45 மீட்டர்.

**264. உலக டென்னிஸ் போட்டிக்குரிய டேவிஸ் கோப்பையை இதுவரை வென்றுள்ள நாடுகளைக் கூறுக?**

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்சு, தென் ஆப்பிரிக்கா.

**265. முதன்முதல் கிராண்ட் ஸ்லாம் (Grand Slam) விருதினைப் பெற்ற டென்னிஸ் வீரர் யார்?**

***டான் பட்ஜ்*** (Don Budge) 1938ம் ஆண்டு அவர் இந்த விருதினைப் பெற்றார்.

**266. அமெரிக்க நாட்டிற்கு டென்னிஸ் ஆட்டத்தைக் கொண்டு வந்தவர் யார்? எந்த ஆண்டு?**

***குமாரி மேரி அவுட்டர் பிரிட்ஜ்*** (Miss Mary Outer Bridge) நியூயார்க்கைச் சேர்ந்தவர். இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்த ஆண்டு 1874.

**267. டென்னிஸ் ஆட்டத்தில் பயன்படும் உலோக ராக்கெட்டை (Steel Racket) கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?**

***ரானே லக்கோஸ்டி*** (Rane Lacoste) எனும் பிரெஞ்சுக் காரர். அவர் கண்டு பிடித்த ஆண்டு 1960.

**268. 1975ம் ஆண்டின் விம்பிள்டன் வெற்றி வீரரான ஆர்தர் ஆஷ் (Arther Ashe) அடித்த பந்தின் வேகம் எவ்வளவு?**

மணிக்கு 120 மைல் வேகம் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

**269. முதல்முறையாக இந்தியா வளைகோல் பந்தாட்டத்தில் எந்த ஆண்டு தோற்றது? யாரிடம்?**

ரோம் நகரில் 1960ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றது.

270. **ரக்பி ஆட்டத்தைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?**

***வில்லியம் வெப் எல்லிஸ்*** (அமெரிக்கர்) 1923ம் ஆண்டு.

271. **பேட்மின்டன் என்ற பெயர் எந்த ஆண்டு வந்தது?**

1870ம் ஆண்டு பேட்மின்டன் என்ற இடத்தில் ஆடியதால்தான் இந்தப் பெயர் வந்தது.

272. **விரைவோட்டத்தில் Bullet Strat என்ற முறையைக் கண்டு பிடித்தவர் யார்?**

***ஹவார்டு ட்ரூ*** **(Haward Drew)** என்ற அமெரிக்கர்.

273. **மூன்று ஒலிம்பிக் பந்தயங்களில் தொடர்ந்து குத்துச் சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற வீரர் யார்?**

ஹங்கேரி நாட்டினரான லாஸ்லோ பாப் (Laszlo Popp) இவர் வென்ற ஆண்டுகள் 1948, 1952, 1956.

274. **இங்கிலாந்து கிரிக்கெட் குழுவின் தலைவராகவும் (Captain) அதே சமயத்தில் ஒலிம்பிக் பந்தயத்தில் குத்துச் சண்டை வீரராகவும் தங்கப் பதக்கம் பெற்ற இங்கிலாந்து வீரரின் பெயர் என்ன?**

J.W.H.T. டக்ளஸ். 1908 ல் குத்துச் சண்டை வீரர். அவர் 18 டெஸ்டுகளில் குழுத் தலைவராகவும் இருந்து விளையாடி இருக்கிறார்.

275. **இந்தியாவின் சிறந்த சதுரங்க ஆட்டக்காரர் யார்?**

எம். ஆரன். தற்போது ஆனந்த் விஸ்வநாதன்.

276. **1980ம் ஆண்டின் விம்பிள்டன் வெற்றி வீரரான ஜான்போர்க் யாரைத் தோற்கடித்தார்.**

அமெரிக்க வீரரான ஜான் மெக்கன்ரோ என்பவரைத் தோற்கடித்தார்.

**277. ஆர்தர் ஆஷ் எனும் வீரரின் விம்பிள்டன் வெற்றியின் சிறப்பு என்ன?**

விம்பிள்டன் போட்டியில் வென்ற முதல் நீக்ரோ வீரர் இவர்தான்.

**278. இந்தியாவின் தலைசிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர் யார்?**

இப்போது லியாண்டர் பயஸ்.

**279. முகமது அலியின் குத்துச் சண்டை வரலாற்றில் அவரது வெற்றி சாதனை என்ன?**

மொத்தம் 50 முறை போட்டியில் கலந்து கொண்டு 47 முறை வென்று, மூன்று தடவை தான் தோற்று இருக்கிறார்.

**280. அவர் அந்த மூன்று முறையும் யார் யாரிடம் தோற்றார்?**

1972ல் ஜோ பிரேசியரிடமும், 1974ல் கென்நார்ட்டனிடமும், 1978ல் ஸ்பிங்சிடமும் (Spinks) தோற்றார்.

**281. டெகரானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிக்கு வளைகோல் பந்தாட்டக் குழுத் தலைவராக இருந்து விளையாடியவர் யார்?**

அஜித்பால்சிங்.

**282. உலகக் கிரிக்கெட் போட்டிக்கான கோப்பைக்கு புருடன்சியல் கோப்பை (Prudential Cup) என்று ஏன் பெயர் வந்தது?**

புருடென்சியல் அஸ்யூரன்ஸ் கம்பெனியாரால் (Prudential Assurance) இந்தக் கோப்பை

வழங்கப்பட்டதால்தான்.

283. **100 மீட்டர் 200 மீட்டர் விரைவோட்டங்கள் இரண்டிலும் உலக சாதனை வைத்திருந்த பெண்மணி யார்?**

போலந்து நோட்டைச் சேர்ந்த இரினா ஸ்வென்சிகா (Irene Szewinska)

284. **உயரத் தாண்டலில் உலக சாதனை நிகழ்த்தியிருக்கும் பெண்மணி யார்?**

ஸ்டெப்கா கோஸ்டோடினோவா (Stefka Kostadinova) பல்கேரியப் பெண். அவர் தாண்டிய உயரம் 2.09 மீட்டர்.

285. **பிறரால் தோற்கடிக்கப்படாமலே,உலக வெற்றி வீரராக ஓய்வு பெற்ற பேரெடைப் பிரிவு (Heavo Weight) குத்துச் சண்டை வீரர்கள் யார்?**

கோன் டர்னே (Con Turney); ராக்கி மார்சியானோ (Rocky Marciano); ஜோலுயிஸ் (Joe Louis).

286. **கைகளில் உறை மாட்டிக் கொள்ள வேண்டும் என்ற விதி வந்தபிறகு முதன்முதலில் பேரெடைப் பிரிவில் வெற்றி பெற்ற வீரர் யார்?**

***ஜான் சுலிவன்*** எனும் அமெரிக்கர்.

287. **படகோட்டும் போட்டி வீரர்களில் அர்ஜுனா விருது பெற்றவர் யார்?**

***அஸ்பார் உசேன்*** (Asfar Hussain).

288. **ஒலிம்பிக் பந்தயங்களில் உள்ள நீச்சல் போட்டிகளில் முதல் முறையாக 4 தங்கப் பதக்கங்களைப் பெற்ற வீரர் யார்?**

***டொனால்டு ஸ்கூலண்டர்*** (Donald Schollander) அமெரிக்கர். 1964 இல் நடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில்

வெற்றி பெற்றார்.

289. **மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் குழுத் தலைவர் கிளைவ் லாயிட். அவர் நாட்டில் பெற்ற விருதின் பெயர் என்ன?**

கயானா நாட்டின் மிகப் பெரிய மூன்றாம் விருதான ***தங்க அம்பு*** (Golden Arrow)

290. **பெண்களுக்கான கைப்பந்தாட்டம் எந்த ஒலிம்பிக் பந்யத்தில் இணைக்கப்பட்டது?**

1964ம் ஆண்டு டோக்கியோவில் நடந்தபொழுது.

291. **40 ஆண்டுகளுக்கு மேலாக கேரம் ஆட்டத்தின் வளர்ச்சிக்குப் பணிபுரிந்து வளர்த்து உலக நாடுகளுக்கிடையே பெருமை பெற்றிருப்பவர் பெயர் என்ன?**

***பி.பங்காரு பாபு.***

292. **ஜான்நியூகோம் (John Newcombe) என்பவர் எத்தனை முறை விம்பிள்டன் வெற்றி வீரராக வந்திருக்கிறார்?**

3 முறை.

293. **இரண்டாம் உலக கிரிக்கெட் போட்டிக்கு இந்தியக் குழுத் தலைவராக இங்கிலாந்து சென்றவர் யார்?**

எஸ். வெங்கடராகவன். தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்.

294. **இந்தியப் பல்கலைக் கழகங்களுக்கிடையே நடந்த கிரிக்கெட் போட்டிகளில் அதிகமாக எடுத்த தனியாரின் மொத்த ஓட்டங்களின் சாதனை என்ன (Individual Score)?**

327 ஓட்டங்கள். சாதனை புரிந்தவர் ***சுனில் கவாஸ்கர்.***

295. **பழங்கால கிரேக்கத்தில் பெண்களுக்காக ஒலிம்பிக் பந்தயங்கள் நடந்தன. அதனைத் தொடங்கியது யார்?**

ஹிப்போடொமியா என்னும் கிரேக்க இளவரசி என்று குறிப்பிடுவார்கள்.

**296. ஆண்கள் பெண்களுக்கான ஒலிம்பிக் பந்தயங்கள் எந்தெந்தக் கடவுள்களின் பெயரால் நடந்தன?**

ஆண்கள் நடத்திய ஒலிம்பிக் பந்தயம் சீயஸ் (Zeus) கடவுள் பெயராலும்; பெண்கள் நடத்திய பந்தயம் ஹிரா (Heraea) எனும் பெண் தெய்வத்தின் பெயராலும் நடைபெற்றன.

**297. பறக்கும் சீக்கியர் (Flying Sikh) என்று புகழப்பட்ட இந்திய ஓட்ட வீரர் யார்?**

மில்கா சிங்.

**298. கிரிக்கெட் வீரர் கேரிசோபர்ஸ் எடுத்துள்ள மொத்த ஓட்டங்கள் எவ்வளவு?**

8260.

**299. கேரிசோபர்ஸ் அதிக அளவு ஓட்ட சாதனை (Highest Score) எடுத்தது எந்த ஆண்டில்? எந்த இடத்தில்?**

1958ம் ஆண்டு கிங்ஸ்டனில் நடந்த பாகிஸ்தான் மேற்கிந்தியாவுக்குமிடையே நடந்த போட்டியில் 365 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

**300. ஒரு பந்தடித்தாடும் ஆட்டக்காரர் (Batsman) பந்தை உயரத் தூக்கி அடித்து விட்டு ஓட்டங்கள் எடுக்கும் முயற்சியின்போது ஓட்டமும் எடுத்து விடுகிறார். அதே சமயத்தில் அந்தப் பந்தை எதிராட்டக்காரர் ஒருவர் பிடித்து விடுகிறார் (Catch). அவர் எடுத்த ஓட்டம் அவர் கணக்கில் சேருமா?**

உயரத்தில் உள்ள பந்தை எதிராட்டக்காரர் பிடித்து விட்டால் அடித்த ஆட்டக்காரர் ஆட்டம் இழக்கிறார்.

ஓடிய ஓட்டம் கணக்கில் சேராது.

301. **டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் வளைகோல் பந்தாட்டப் போட்டியில் ஒரே ஒரு வெற்றி எண் (Goal) எடுத்து பாகிஸ்தானை இந்தியா வென்றது. அந்த 'வெற்றி எண்' எடுக்கக் காரணமாக இருந்தவர் யார்?**

***மொகிந்தர்லால்*** (Mohinder Lal).

302. **உலக நாடுகளுக்கிடையே நடக்கும் வளைகோல் பந்தாட்டப் போட்டியில் ஒரு குழுவிற்கு இரண்டு தலைவர்கள் (Captains) இருந்திருக்கிறார்கள். எங்கே? எந்த நாட்டில்?**

இந்தியாவில்தான். மெக்சிகோ ஒலிம்பிக் பந்தயத்திற்குப் போன நம் குழுவுக்கு 2 குழுத் தலைவர்கள். 1. குருபக்ஸ் சிங். 2. பிரிதிபால் சிங்.

303. **பல ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு உலக அரங்கில் இந்தியா விளையாடியபோது பாகிஸ்தான் நடுவர் ஒருவரும்; பாகிஸ்தான் விளையாடியபோது இந்திய நடுவர் ஒருவரும்; நடுவராகப் பணியாற்றினார்கள். அவர்கள் யாவர்?**

பக்ஷி (Bakshi) இந்திய நடுவர். ஷேக் (Shaik) பாகிஸ்தான் நடுவர்.

304. **முதன்முதலாக உலக மேசைப் பந்தாட்டப் போட்டி எந்த ஆண்டு எந்த நகரில் நடைபெற்றது?**

1962ம் ஆண்டு டிசம்பர் மாதம் இலண்டன் மாநகரில் நடைபெற்றது.

305. **விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இங்கிலாந்து அரசு குடும்பத்தினர் யாராவது வெற்றி பெற்றிருக்கிறார்களா?**

'ஆறாம் ஜார்ஜ்' என்று அழைக்கப்பட்டவர் - இரட்டையர் போட்டியில் வெற்றி பெற்றிருக்கிறார்.

**306. ஆறாம் ஜார்ஜ் அந்நாளில் எந்தப் பெயரில் விளையாடினார்?**

'ஆறாம் ஜார்ஜ்' அதற்கு முன் யார்க் பிரபுவாக இருந்தார். அவர் லூயிஸ் கிரீக என்பாருடன் சேர்ந்து இரட்டையர் ஆட்டத்தில் வெற்றியடைந்திருக்கிறார்.

**307. கால்பந்தாட்டத்தில் உள்ள இலக்கின் (Goal) உயரம் அகலம் எவ்வளவு?**

8 அடி உயரம். 24 அடி அகலம்.

**308. கிரிக்கெட் ஆட்டத்தில் 2 விக்கெட்டுகளுக்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவு?**

22 கெஜம்.

**309. குத்துச் சண்டை வீரர்கள் கட்டாயமாக 2 முறை கை குலுக்கிக் கொள்ள வேண்டும். (Shaking Hands). எப்பொழுது?**

வீரர்கள் இருவரது பெயர்களை நடுவர் முதன்முறையாக அறிவித்தவுடன் இருவரும் மேடையின் நடுவிடத்திற்கு வந்து கைகுலுக்கி விட்டு தங்களுக்குரிய இடங்களுக்குப் போய்விட வேண்டும்.

போட்டி முடிந்து வெற்றி பெற்றவர் பெயரை நடுவர் அறிவித்தவுடன் இருவரும் கைக்குலுக்கி கொள்ள வேண்டும்.

**310. குத்துச் சண்டையில் போட்டுக் கொள்ளும் கையுறையின் கனம் எவ்வளவு-**

8 அவுன்ஸ்.

**311. கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தைத் தடுத்தாடுவோர் (Fields Men) பந்து காணாமற் போய் விட்டது (Lost Ball) என்று கூறினால் நடுவரின் தீர்ப்பு என்ன?**

6 ஓட்டங்கள் (Runs) தரப்படும்.

**312. 'லோனா' என்பது எந்தெந்த ஆட்டங்களில் வருகிறது?**

சடுகுடு (கபாடி), கோகோ

**313. சடுகுடுவில் வரும் லோனாவுக்கும் கோகோவில் வரும் லோனாவுக்கும் என்ன வித்தியாசம்?**

சடுகுடு லோனாவுக்கு 2 வெற்றி எண்கள் அதிகமாகக் (Extra) கிடைக்கும். கோகோவின் லோனாவுக்கு வெற்றி எண்கள் கிடையாது. எதிராட்டக்காரர்களைத் தொட்டு வெளியேற்றிய அந்தக் குழுவின் குறிப்பேட்டில் 'லோனா' என்று மட்டுமே குறிக்கப்படும்.

**314. கோகோ ஆட்டத்தில் ஒரு குழுவுக்கு எத்தனை பேர்?**

9 ஆட்டக்காரர்கள்.

**315. 1975ம் ஆண்டு டெகரானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் எத்தனை வீரர்கள் வீராங்கனைகள் (மொத்தம்) கலந்து கொண்டனர்.**

ஏறத்தாழ 3000 பேர் என்று கணக்கிட்டிருக்கின்றனர்.

**316. அவர்களுக்கிடையே குறைந்த வயதும் அதிக வயதும் உடையதுமான விளையாட்டு வீரர்களைப் பற்றிய விவரம் கூறு?**

மிகவும் குறைந்த வயதினர் 10 வருடம் 8 மாதம் நிரம்பிய ***ராகன் சிவான் புல்கல்*** (Rachancevan Bulhel) நீச்சல் போட்டியாளர்.

அதிக வயதினர் பல் டாக்டர் ஒருவர். 57 வயதுடையவர் பெரிய டாக்டர். ***டிப்மங்கோலக்சன்னா*** (Dr. Tipp. Monghor Laksanna) துப்பாக்கிச் சுடும் போட்டியாளர்.

**317. உலக மேசைப் பந்தாட்டத்தில் வென்ற சீனாவில்**

**பிரசித்திப் பெற்ற மூன்று உலக வெற்றி வீராங்கனைகளின் (World Champions) பெயர்களைக் கூறு?**

குளுகூக் கூல் (Culu Chuig Hul)

லின் ஹயுசிங் (Lin Hu Ching)

ஹுயூலான் (Hu Yu Lan)

318. **ஒலிம்பிக் பந்தயங்களில் ஒருவர் கலந்து கொள்ள வேண்டுமானால் அவருக்குரிய முதல் தகுதி (Qualification) என்ன?**

அவர் முற்றிலும் பொழுது போக்கு உடலாளராக (Amateur Athlete) இருக்க வேண்டும்.

319. **அகில உலக ஒலிம்பிக் கழகத்தின் முன்னாள் தலைவர்கள் யார்? யார்?**

அவெரி பிரண்டேஜ் (Avery Brundage)

பிரபு கில்லானின் (Lord Killanin)

320. **அகில உலக ஒலிம்பிக் கழகத்தின் தற்போதைய தலைவர் யார்?**

ஜுவான் அந்தோனியோ சமாரஞ்ச்

321. **சதுரங்க ஆட்டத்தில் ஆடப் பயன்படும் காய்கள் மொத்தம் எவ்வளவு?**

32 (கறுப்பு, வெள்ளைக் காய்கள் இரண்டும் சேர்ந்து)

322. **அவைகள் என்னென்ன என்பதைப் பிரித்துக் கூறு?**

வெள்ளைக் காய்கள் 16. கறுப்புக் காய்கள் 16

ராஜா 1, ராணி 1, ரதம் 2, யானை 2, குதிரை 2, சிப்பாய் காய்கள் 8, ஆக மொத்தம் 16 காய்கள் இருக்கின்றன.

**323. முதன்முதலாக மல்யுத்த முறைகளை முறைப்படுத்திய கிரேக்க மன்னர் யார்?**

கிரேக்க நாட்டை கி.மு. 900 ம் ஆண்டு ஆண்ட '***தீசியஸ்***' எனும் மன்னன்.

**324. டென்னிஸ் ஆட்டத்தின் ஆடுகளத்தினுடைய அளவுகள் என்ன?**

ஒற்றையர் ஆட்டத்திற்குரிய ஆடுகளம் 78' x 27'

இரட்டையர் ஆட்டத்திற்குரிய ஆடுகளம் 78' x 36'

**325. வெறுங்காலால் ஓடி, மாரத்தான் ஓட்டத்தில் வெற்றி பெற்று புதிய சாதனை உண்டாக்கியவரின் பெயர் என்ன?**

அபீப் பிக்கலா (Abee Bicala) என்பவர். எதியோப்பியா தேசத்தவர்.

**326. கிரிக்கெட் பந்துக்கும் வளைகோல் பந்துக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?**

கிரிக்கெட் பந்தின் நிறம் சிவப்பு.

கனம் 5½ அவுன்சிலிருந்து 5¾ அவுன்சு வரை.

வளைகோல் பந்தின் நிறம் வெண்மை.

கனம் 5½ அவுன்சிலிருந்து 5¾ அவுன்சு வரை.

**327. கிரிக்கெட்டில் ஒரு பந்தெறி தவணைக்கு (Over) எத்தனை முறை பந்தெறியலாம்?**

8 முறை அல்லது 6 முறை (ஆட்டத்திற்கு முன்னே இரு குழுக்களும் இதனை ஒத்துக் கொண்டிருக்க வேண்டும்)

**328. சடுகுடு ஆட்டத்தின் மொத்த ஆட்ட நேரம் எவ்வளவு?**

ஆண்கள் ஆட்டம் 40 நிமிடம் (2x20)

பெண்கள் ஆட்டம் (30 நிமிடம்)

**329. எறி பந்தாட்டத்தின் (Throw Ball) ஆடுகள அளவு யாது?**

50' x 30'

**330. எறிப் பந்தாட்டத்தில் ஒரு குழுவுக்கு எத்தனை பேர் உண்டு?**

9 பேர்.

**331. கைப்பந்தாட்டத்தில் அர்ஜுனா விருது பெற்ற தமிழக விளையாட்டு வீரர் யார்?**

ஆர். பழநிசாமி.

**332. அகில உலக மேசைப் பந்தாட்டத் தலைமைக் குழு எங்கு எப்பொழுது தொடங்கப் பெற்றது?**

1916ம் ஆண்டு மேற்கு ஜெர்மனியில் தொடங்கப்பட்டது.

**333. கோலூன்றித் தாண்டலில் தற்போதைய உலக சாதனை என்ன? அதனை நிகழ்த்தியவர் யார்?**

18' 6½' டி. ராபர்ட்ஸ் எனும் அமெரிக்கர்.

18' 5¾ சாதனையை ஏற்படுத்தியிருந்தவர் ஆர்.சீக்ரன் (Seagren), இருவரும் அமெரிக்கர்கள் தான். 1994ல் உலக சாதனை 6.14 மீ. சாதனையாளர் செர்ஜி பியூப்கா.

**334. முதன்முதல் 7'5 ½ " உயரம் தாண்டி உயரத் தாண்டலில் (High Jump) உலக சாதனை நிகழ்த்தியவர் யார்?**

வெலரி புருமல் என்பவர். இவர் ரஷ்யாவைச் சேர்ந்தவர். 1993ல் லிருந்து உலக சாதனை 2.45 மீ சாதனையாளர்

சாட்டோ மேயர்.

335. **கிரிக்கெட் பந்தாடும் மட்டையின் (Bat) நீள, அகலம் என்ன?**

38 அங்குலத்திற்கு மிகாத நீளம்.

4½ அங்குலத்திற்கு மேற்படாத அகலம் உடையது.

336. **வளைகோல் பந்தாட்டக் கோலின் (Hockey Stick) எடை என்ன?**

12 அவுன்சிலிருந்து 28 அவுன்சு வரையில் எந்தக் கனமுடையதாகவும் இருக்கலாம்.

337. **கைப்பந்தாட்டத்தில் ஒரு குழு ஒரு 'முறை ஆட்டத்தில்' (One Game) எத்தனை முறை மாற்றாட்டக்காரர்களை (Substitutions) மாற்றி ஆடலாம்?**

6 தடவை மட்டும்.

338. **பெண்கள் விளையாடும் இரண்டு விளையாட்டுகளுக்கு ஒரு பந்தே கனம் சுற்றளவு பொருந்தியுள்ளதாக அமைந்திருக் கிறது. அதன் கனம், சுற்றளவு என்ன? அந்த இரு விளையாட்டுக்கள் எவை?**

வலைப் பந்தாட்டம் (Net Ball)

எறி பந்தாட்டம் (Throw Ball)

பந்தின் சுற்றளவு 27'' லிருந்து 28'' உள்ள 5ம் நம்பர் கழகக் கால் பந்தாகும்.

339. **மென்பந்தாட்டத்தில் (Soft Ball) ஒரு குழுவிற்கு எத்தனை ஆட்டக்காரர்கள்?**

9 பேர்.

340. **மென்பந்தாட்டத்தின் பந்து எவ்வளவு கனம் உள்ளது?**

6 அவுன்சிலிருந்து 6¾ அவுன்சு வரை. சுற்றளவானது 11⅞" லிருந்து 12¼ வரை.

**341. கூடைப் பந்தாட்டத்திற்குரிய இலக்கு (வளையம்) எத்தனை அடி உயரத்தில் பொருத்தப்பட்டிருக்கிறது?**

10 அடி உயரம்.

**342. பூப்பந்தாட்டத்தில் அர்ஜுனா விருது பெற்ற தமிழக விளையாட்டு வீரர் யார்?**

அப்துல் கரீம்.

**343. கோல்ஃப் (Goalf) ஆட்டத்தில் மொத்தம் எத்தனை குழிகளில் ஆட வேண்டும்?**

18 குழிகள்.

**344. தட்டெறியும் நிகழ்ச்சிகளில் (Discus Throw) தற்போதைய உலக சாதனை என்ன? அதனை ஏற்படுத்திய வீரர் யார்?**

ஜெர்மானிய வீரர் ***ஜர்ஜென் ஸ்கல்ட்***. தூரம் 74.08 மீ.

**345. கைப்பந்தாட்டத்திற்குரிய ஆடுகளத்தின் அளவு என்ன?**

நீளம் 18 மீட்டர். அகலம் 9 மீட்டர்.

**346. மேசைப் பந்தாட்டத்திற்குரிய மேசையின் நீளம் அகலம் உயரம் யாவை?**

மேசையின் நீளம் 9 அடி. அகலம் 5 அடி. உயரம் 2½ அடி.

**347. கைப்பந்தாட்டத்தில் ஆட்ட நேரத்தில் நடுக்கோட்டை (Centre Line) ஒருவர் மிதித்தால் அது தவறா? (Foul)?**

நடுக்கோட்டை மிதித்தால் அது தவறில்லை. கோட்டை காலை உயர்த்தி மிதிக்கும்பொழுது அதைக் கடந்து

எதிர்க்குழு பகுதியையும் தொட்டு விட்டால் அதுதான் தவறாகும்.

**348. கைப்பந்தாட்டத்தில் வலையின் உயரம் எவ்வளவு?**

ஆண்களுக்கான ஆட்டத்திற்குரிய உயரம் 7'11½'' (2.43 மீ. )

பெண்களுக்கான ஆட்டத்திற்குரிய உயரம் 7' 4'' (2.24 மீ)

**349. கைப்பந்தாட்டத்தில் ஆட்ட நேரத்தின்போது பந்தை வலைக்கு மேல் அடித்தபிறகு வலையைத் தாண்டி அடித்த கை (மறுபுறம்) போகலாமா?**

போகலாம். அது தவறில்லை.

**350. வளையப் பந்தாட்டத்திலுள்ள (Ring Tennis) வளையத்தின் அளவு என்ன?**

விட்டம் 7'' உள்ள வளையமானது 1¾ '' கனமுள்ளதாக அமைந்து 7 லிருந்து 9 அவுன்சு வரையுள்ள எடை அமைப்புடன் இருக்க வேண்டும்.

**351. வளையப் பந்தாட்டத்திற்குரிய வலையின் உயரம் எவ்வளவு?**

6 அடி

**352. மல்யுத்தத்தில் போட்டிக்குரிய மொத்த நேரம் எவ்வளவு?**

9 நிமிடங்கள். அதாவது 3 சுற்றுக்கள் (Rounds). ஒவ்வொரு சுற்றுக்கும் 3 நிமிடங்கள். இடையில் ஒரு நிமிடம் இடைவேளை உண்டு.

**353. கம்பி சுற்றிக் குண்டெறியும் (Hammer Throw) நிகழ்ச்சியில் பழைய உலக சாதனை செய்த வீரர் யார்?**

76.66 மீட்டர் ஏற்படுத்திய வீரர் ***அலெக்சி ஸ்பிரிடான்னேவ்*** (Aleksey Spiridonev) ரஷ்யர்.

**354. அதில் தற்போதைய புதிய சாதனையை ஏற்படுத்தியவரின் அரிய சாதனை என்ன?**

புதிய சாதனையை ஏற்படுத்தியவர் பெயர் ***கார்ல் ஹெய்ன்ஸ்ரீம்*** (Karl Heinz Reihm) மேற்கு ஜெர்மனிய வீரர்.

அவர் எறிந்த 6 எறிகளிலுமே அவர்புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார். அவை வருமாறு: 76.70 மீ. 77.56 மீ. 77.10 மீ. 78.50 மீ. 77.16மீ. 77.20மீ.

1980ம் ஆண்டு ஒலிம்பிக் சாதனை 81.80 மீட்டர். இதனை ஏற்படுத்திய வீரர் ரஷ்யாவைச் சேர்ந்த ***யூரி செடிக்*** (Youri Sedykh)

1983ல் யூரிசெடிக்கின் சாதனை 86.74மீ.

**355. வளைகோல் பந்தாட்ட இலக்கின் (Goal) உயரம் அகலம் எவ்வளவு?**

உயரம் அடி. அகலம் 12 அடி.

**356. கேரம் ஆட்டத்தில் ஆடப்பயன்படும் ஆட்டக் காய்கள் (Coins) மொத்தம் எவ்வளவு?**

19 காய்கள்.

**357. கேரத்தில் ஒரு ஆட்டத்தில் (Game) வெற்றி பெற எத்தனை வெற்றி எண்கள் எடுக்க வேண்டும்?**

29 வெற்றி எண்கள்.

**358. டென்னிஸ் ஆட்டத்தின் மெக்கா என்று அழைக்கப்படும் இடம் எது?**

விம்பிள்டன்.

**359. தமிழ்நாடு கிரிக்கெட் கழகத்தின் தலைவர் யார்?**

M.A. சிதம்பரம்.

**360. இந்திய டெஸ்ட் ஆட்டக் குழுவிற்கு முதன்முதலாக குழுத் தலைவன் (Captain) ஆன தமிழகக் கிரிக்கெட் ஆட்டக்காரர் யார்?**

எஸ். வெங்கடராகவன்.

**361. இந்திய கிரிக்கெட் ஆட்டக் குழுவில் முதன்முதலாக விளையாடும் பெருமை பெற்ற தமிழகக் கிரிக்கெட் ஆட்டக்காரர் யார்?**

எம்.ஜே. கோபாலன்.

**362. இந்தியாவில் சிறந்த மல்யுத்த வீரர் என்ற இணையற்ற புகழ் பெற்றவர் யார்?**

தாராசிங்.

363. இறகுப் பந்தாட்டத்தின் (Shuttle Cock) முன்னாள் தேசிய வெற்றி வீரர் யார்? (இந்தியா)

பதுகோன் பிரகாஷ் (Padukone Prakash)

364. 400 மீட்டர் ஓட்டத்தில் ஓடி, பழைய ஒலிம்பிக் சாதனையை முறியடித்த பிறகும் ஒரு பதக்கங்கூட வாங்காத நிலையினை எய்திய இந்திய ஓட்டக்காரர் யார்?

மில்காசிங். 1960ம் ஆண்டு அவர் நான்காவதாக ஓடி முடித்தார்.

365. தமிழகத்தில் எத்தனை உடற்கல்விக் கல்லூரிகள் இருக்கின்றன?

ஐந்து.

1. ஒய்.எம்.சி.ஏ. உடற் கல்விக் கல்லூரி, சென்னை.

2. அழகப்பா உடற்கல்விக் கல்லூரி, காரைக்குடி

3. மாருதி உடற்கல்லூரி, கோவை

4. அண்ணாமலைப் பல்கலைக் கழக உடற்கல்விக் கல்லூரி, சிதம்பரம்

5. சாரதா மகளிர் உடற்கல்விக் கல்லூரி, சேலம்.

**366. உயரத் தாண்டலில் முதன்முதலாக 7 அடி உயரத்தைத் தாண்டியவர் யார்?**

***ஜான் தாமஸ்*** எனும் அமெரிக்கர்.

**367. தற்போதைய நீளம் தாண்டலுக்கு உள்ள உலக சாதனை எவ்வளவு?**

8.95 மீ. சாதனையாளர் ***மைக்பவல்.***

**368. 27 ஆண்டுகளுக்கு மேல் இருந்த ஜெசி ஓவன்ஸ் தாண்டிய நீளத்தாண்டலில் அதிகத் தூரத்தைத் தாண்டி ஒரு புதிய சாதனையை முதலில் பொறித்த வீரர் யார்?**

***ரால்ப் பாஸ்டன்*** (Ralph Boston) எனும் அமெரிக்க வீரர்.

**369. டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் முதன் முதலாக 'இரட்டைசதம் எடுத்து ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியவர் யார்? எங்கே எந்த ஆண்டில்?**

R.E. ஃபாஸ்டர் எனும் ஆங்கிலேயர் இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே (1903-1904) சிட்டின என்னுமிடத்தில் நடந்த போட்டியின்போது இந்த சாதனையை ஏற்படுத்தினார்.

**370. நின்று கொண்டே உயரம் தாண்டும் போட்டியில் (Standing High Jump) ஒலிம்பிக் போட்டியில் பலமுறை வெற்றி வீரராக வந்தவர் யார்?** அவரது **சாதனை எவ்வளவு?**

''ராய் எவ்ரி'' ஏற்படுத்திய சாதனை 5 அடி 5 அங்குலம்.

**371. யோகாசனம் என்றால் என்ன?**

யோகம் என்றால் அலையும் மனதை அலையாமல் ஒருவழிப்படுத்திக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்யும் செயல். ஆசனம் என்றால் மனதை ஒருவழிப்படுத்த அமர்ந்து செய்யும் இருக்கை முறை.

**372. கேரம் ஆட்டத்தில் அடிப்பானின் (Striker) எடை எவ்வளவு?**

1⅝ அங்குலம் விட்டமுள்ள அடிப்பானின் அனுமதிக்கப்பட்ட அதிக எடை 15 கிராம். ஆகும்.

**373. உலக மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு ஏதாவது உண்டா?**

ஆமாம். 15 வயதுக்குட்பட்டவர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

**374. யோகாசனங்கள் எத்தனை? அவற்றுள் மிகவும் முக்கியமானவை எத்தனை என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன?**

மொத்தம் 109. மிகவும் முக்கியமானவை 72 என்கிறார்கள்.

**375. பிராணாயாமம் என்றால் என்ன?**

பிராணன் என்றால் சுவாசம். யாமம் என்றால் கட்டுதல். சுவாசத்தை அதன் விருப்பப்படி விடாமல் நமது விருப்பம்போல் கட்டுப்படுத்துதலைத்தான் பிராணாயாமம் என்கிறோம்.

**376. டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா முதன்முதலாக எந்த நாட்டை வென்று புதிய சாதனை செய்தது?**

இங்கிலாந்து நாட்டை.

377. கால்பந்தாட்டத்தில் புதிய அயலிட விதி (New Off-Side Rule) எப்பொழுது ஏற்பட்டது?

1911ம் ஆண்டு.

378. ஆசிய இறகுப் பந்தாட்டப் போட்டிக்கு வழங்கப்படும் கோப்பையின் பெயர் என்ன?

துங்கு அப்துல் ரகுமான் தங்கக் கோப்பை (Tunku Abdul Rehman Gold Cup)

379. வளைகோல் பந்தாட்டம் போன்றதொரு ஆட்டம் இந்தியாவில் பழங்காலத்தில் ஆடப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அப்போது அது எந்தப் பெயரால் அழைக்கப்பட்டிருந்தது?

கிடோ கண்டி (Khiddo Kundi) எனும் பெயரால்.

380. கிரிக்கெட் வெற்றி எண்குறிப்புப் பலகை (Score Board) எப்பொழுது எங்கு முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது?

இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸ் (Lords) மைதானத்தில் 1846ம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது.

381. கால் பந்தாட்டத்தில் போட்டி தொடங்கும்போது இருக்க வேண்டிய கால் பந்தின் எடை எவ்வளவு?

18 அவுன்ஸ் இருக்க வேண்டும்.

382. ஆங்கிலக் கால்வாய் (English Channel) என்பது எங்கு இருக்கிறது? அதன் நீளம் எவ்வளவு-

35 மீ தூரம் உள்ள ஆங்கிலக் கால்வாய். பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடைப்பட்ட கால்வாய் ஆகும்.

383. ஆங்கிலக் கால்வாயை நீந்தி புதிய சாதனை

**செய்திருக்கும் வீராங்கனை பெயர் என்ன? எப்பொழுது?**

கனடா நாட்டைச் சேர்ந்த குமாரி சிண்டி நிகோலஸ் 1974ம் ஆண்டு நீந்திய சாதனையின் நேரம் 9 மணி 46 நிமிடம்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த லிண்டாமெகில் என்பவர் 1967ம் ஆண்டு நீந்திய சாதனையின் நேரம் 9 மணி 59 நிமிடம்.

384. **முதன் முதலாக இரும்புக் குண்டினை (Shot Put) 60 அடிக்கு மேல் எறிந்த வீரர் யார்?**

அமெரிக்காவைச் சேர்ந்த பேரி ஒப்ரியன் (Parry O'berian) 1956ம் ஆண்டு மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் எறிந்தார்.

385. **ஒலிம்பிக்கில் நடக்கும் மல்யுத்தப் போட்டிகளில் எத்தனைப் பிரிவுகளாக வீரர்கள் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்படுகின்றன?**

8 பிரிவுகளாக

386. **முதன்முதலாக கோல்ப் ஆட்டம் ஆடிய அரசி (முதல் பெண்மணி) யார்?**

ஸ்காட்லாந்து நாட்டை ஆண்ட மேரி என்பவர்.

387. **கிரிக்கெட் மைதான எல்லைக் கோட்டைத் தாண்டி (Boundary Line) தரையில் விழுவது போல் பந்தை அடித்தால் அதற்கு 6 ஓட்டம் தர வேண்டும் என்ற விதி எந்த ஆண்டு ஏற்பட்டது?**

1910ம் ஆண்டு.

388. **சதுரங்க ஆட்டத்தில் உள்ள ராணி, யானை, ரதம், குதிரை, சிப்பாய் காய்களுக்குரிய மதிப்பு (Points) எண் என்ன?**

ராணிக்கு - 9; யானைக்கு - 5; ரதம் - 3 ; குதிரை - 3;

சிப்பாய் தாய்க்கு - 1.

**389. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதங்கள் எடுத்தாடிய வீரர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ***டான் பிராட்மேன்*** என்பவர் (Don Bradman) அவர் சாதனையை முறியடித்தவர் இந்திய வீரர் ***சுனில் கவாஸ்கர்*** ஆவார்.

**390. கால் பந்தாட்டத்தில் உள் இலக்குக் காம்பங்கள் (Goal Posts) எந்த நிறத்தில் இருக்கும்?**

வெள்ளை நிறத்தில்

**391. எம்.சி.சி.என்று அழைக்கப்படுவது எது?**

மெரிலிபோன் கிரிக்கெட் சங்கத்தைத்தான் (Meryleboan Cricket Club) எம்.சி.சி. என்று அழைக்கிறார்கள்.

**392. நான்காவது ஆசிய இறகுப் பந்தாட்டப் போட்டி எங்கே நடைபெற்றது? வென்றது யார்?**

1976 ம் ஆண்டு ஹைதராபாத்தில் உள்ள லால்பகதூர் ஸ்டேடியத்தில் நடந்தது. வென்ற நாடு இந்தோனேசியா.

**393. குதிரைப் பந்தாட்டம் (Polo) எந்த நாட்டில் பிறந்தது?**

இந்தியாதான் இதன் தாயகம் என்று சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

**394. மாரதான் ஓட்டப் பந்தயத்தில் உலக சாதனை நேரம் எவ்வளவு?**

சாதனை தற்போது 2.09.21. ஏற்படுத்தியவர் கார்லோன் லோபஸ்.

**395. இந்தியாவின் முதல் டெஸ்ட் குழுத் தலைவர் யார்?**

சி.கே. நாயுடு. 1932ம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸ் எனும் மைதானத்தில் இங்கிலாந்துடன்

ஆடும்பொழுது குழுத் தலைவராகப் பணியாற்றினார்.

**396. கால் பந்தாட்டத்தில் சிறந்த ஆட்டக்காரரான 'பீலி' என்பவரைப் போல் பெண்ணொருத்தியும் பெண் பீலி (Female Pele) என்று தற்போது அழைக்கப்படுகிறார். அந்தப் பெண் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

ஜமாய்கா நாட்டைச் சேர்ந்த ***பிவர்லி ரேஞ்சர்*** (Beverly Ranger) என்பவர். 22 வயதான இவரை ஜெர்மானியக் குடியரசு மக்கள் சிறந்த ஆட்டக்காரி என்று தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

**397. அகில உலக வளைகோல் பந்தாட்டத்திற்குரிய பரிசுக் கோப்பையின் பெயர் என்ன?**

ரேனேபிராங்க் தங்கக் கோப்பை (Rene Frank Gold Cup)

**398. மணிலாவில் 1975 செப்டம்பர் முதல் தேதி நடந்த குத்துச் சண்டை உலகப் புகழ் பெற்றது. அதில் போட்டியிட்டவர்கள் யார்? வென்றது யார்?**

***முகமது அலி, ஜோ பிரேசியர்.*** வென்றவர் ***முகமது அலி.*** 14 வது ரவுண்டில் 'வெற்றி எண்கள்' அதிகம் பெற்று வெற்றியடைந்தார்.

**399. 1975ம் ஆண்டின் பிலியர்ட்ஸ் உலக வெற்றி வீரராக வந்த நார்மன் டக்ளே என்பவர். இதற்கு முன் ஒருமுறை உலக வெற்றி வீரராக வந்திருக்கிறார். அது எந்த ஆண்டில்?**

இங்கிலாந்தின் வெற்றி வீரராக 8 முறை வெற்றி பெற்ற ***நார்மன் டக்ளே,*** 1971ம் ஆண்டு உலக வெற்றி வீரராக விளங்கியிருக்கிறார்.

**400. கால் பந்தாட்டத்தில் உள்ளெறிதல் (Throw-in) செய்யும்போது, ஒருவர் ஒரு கையால் பந்தை எறிய மறுகை பக்கத்துணை போல் உதவுகிறது. இது சரியான**

**எறிமுறை தானே?**

இல்லை. இரண்டு கைகளாலும் பந்தைப் பற்றியவாறுதான் எறிய வேண்டும்.

**401. கோகோ ஆட்டத்தை மொத்தமாக எவ்வளவு நேரம் ஆட வேண்டும்.**

ஒரு கோகோ ஆட்டத்தில் விரட்டும் வாய்ப்பு ஓடும் வாய்ப்பு என்று இரண்டு முறை ஆடினால் மொத்தம் 36 நிமிடம் ஆட வேண்டும்.

**402. பூப்பந்தாட்டப் போட்டியில் (Ball Badminton) முன்மாதிரியாகப் பந்தை ஆடிப்பார்க்க (Trial Ball) அனுமதி உண்டா? இருந்தால் எத்தனை முறை?**

ஒரே ஒரு முறை ஆடிப்பார்க்கத்தான் அனுமதி உண்டு.

**403. மாவட்டப் பள்ளிகளுக்கும் (District Schools XI) சென்னை நகரப் பள்ளிகளுக்கும் (City Schools XI) நடக்கின்ற கிரிக்கெட் போட்டிக்கு வழங்கப்படுகின்ற கேடயத்தின் பெயரென்ன?**

என்.ஆர். சாமியப்ப முதலியார் கேடயம்.

**404. டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களில் இந்தியா எடுத்துள்ள மிகக் குறைந்த அளவு ஓட்டங்கள் எவ்வளவு? எங்கே? யாரிடம் தோற்றது?**

இந்திய எடுத்த மிகக் குறைந்த ஓட்டங்கள் 42. இங்கிலாந்தில் இங்கிலாந்துக்கு எதிராக லார்ட்ஸ் மைதானத்தில் ஆடியபோது தோல்வியடைந்து எடுத்த ஓட்டங்கள் 42 ஆகும்.

**405. சென்னையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்விக் கல்லூரியை நிறுவியவர்; முதன்முதல் முதல்வராகப் பணியாற்றியவர் யார்?**

திரு. 'ஹேரி குரோபக்' (Harry Crowe Buck)

406. இறகுப் பந்தாட்டத்தில் (Shuttle Cock) உள்ள பந்தில் எத்தனை இறகுகள் (Feathers) இருக்கின்றன?

14 லிருந்து 16 வரை

407. முதலாவதாக அகில உலக சதுரங்க மேதையாக (International Master) ஆகியிருக்கிற தமிழர் யார்?

தமிழகத்தைச் சேர்ந்த **மேனுவல் ஆரன்** என்பவர்.

408. ஹாலந்து நாட்டின் சிறந்த வளைகோல் பந்தாட்டக்காரர் எனப் புகழப்பட்டவர் யார்?

டைஸ் குரூஸ் (Ties Kruize).

409. இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர் விஜய் அமிர்தராஜின் பந்தடிக்கும் வேகம் (Service) என்ன?

மணிக்கு 99 மைல் வேகம் என்று அவரது பந்தடி வேகத்தைக் கணக்கிட்டிருக்கின்றனர்.

410. விளையாட்டுப் பந்தயத்தில் எறி போட்டி நிகழ்ச்சிகளில் (Throwing Events) இருவர் ஒரே அளவு தூரம் எறிந்து முதலாவதாக இருக்கும்பொழுது, அந்தச் சிக்கலை (Tie) எப்படித் தீர்க்க வேண்டும்?

இருவரும் ஒரே அளவு தூரம் எறிந்திருந்தால்-அவர்கள் இருவரும் அதற்கு அடுத்துக் குறைத்து எறிந்த தூரத்தைப் பார்க்க வேண்டும் (Second Best). அதிலும் அவர்கள் சமமாக இருந்தால் மூன்றாவது அளவில் அதிக தூரம் எறிந்ததைக் (Third Best) கணக்கிட்டுச் சிக்கலைத் தீர்க்க வேண்டும்.

411. நீச்சல் போட்டிகள் எந்த ஆண்டு முதல் ஒலிம்பிக் பந்தயங்களில் இடம் பெற்றன?

1896 ம் ஆண்டு முதல் ஒலிம்பிக் பந்தயங்கில் இடம் பெறுகிறது.

**412. உயரத் தாண்டும் போட்டியில் (High Jump) இரண்டு கால்களையும் தரையில் ஏன்றித் துள்ளித் தாண்டலாமா? (Take-Off)**

தாண்டக்கூடாது. ஒரு காலால்தான் துள்ளி உயரே தாவ வேண்டும் (One Foot Take Off)

**413. நீளத் தாண்டும் போட்டியில் உதைத்தெழும்பப் பயன்படும் (Take Off Board) பலகையின் அளவு என்ன?**

நீளம் 4 அடி (1.22); அகலம் 8 அங்குலம் (200 மி.மீ) உயரம் 4 அங்குலம் (100 மி.மீட்டர்)

**414. தொடரோட்டப் போட்டியில் (Relay Race) பயன்படுத்தப்படும் குறுந்தடியின் (Baton) அளவு என்ன?**

நீளம் 12 அங்குலத்திற்கு மேற்படாமலும் 11 அங்குலத்திற்குக் குறையாமலும் சுற்றளவு 4.75 அங்குலம் உள்ளதாகவும் கனம் 50 கிராமுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

**415. 17 வயதிலேயே ஒலிம்பிக் பந்தயங்களில் டெக்காதலான் போட்டியில் பங்கு பெற்று தங்கப் பதக்கம் வாங்கிய உடலாளர் (Athlete) யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? எந்த ஆண்டு தங்கப்பதக்கம் பெற்றார்?**

***பாப் மத்யாஸ்*** **(Bob Mathais)** எனும் அமெரிக்க வீரர்.

1948ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில், டெகாதலான் எனும் பத்து நிகழ்ச்சி போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார்.

416. **பெண்களுக்கான நீச்சல் போட்டிகள் ஒலிம்பிக் பந்தயங்களில் எந்த ஆண்டு இணைக்கப்பட்டன?**

1912ம் ஆண்டு ஸ்டாக்ஹோம் எனும் இடத்தில் பந்தயங்கள் நடந்தபோது இணைக்கப்பட்டன.

417. **சடுகுடு போட்டிகள் மொத்த ஆட்ட நேரத்திற்குள் எத்தனை மாற்றாட்டக்காரர்களை மாற்றி ஆடலாம்?**

நடுவரின் அனுமதியுடன் அதிக பட்சம் 3 மாற்றாட்டக் காரர்களை மாற்றிக் கொண்டு ஆடலாம்.

418. **பெண்களுக்கான 10,000 மீட்டர் நெட்டோட்டத்தின் உலக சாதனை செய்திருக்கும் வீராங்கனையின் பெயர் என்ன? அவர் ஓடிய சாதனை எவ்வளவு?**

***கிரிஸ்டி வாலென்ஸடெக்*** என்பவர் (Christe Valensteck) ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர் அவரது ஓட்டத்தின் சாதனை நேரம் 34 நிமிடம் 14 வினாடிகள்.

419. **அதற்கு முந்தைய உலக சாதனையைப் பொறித்தவர் யார்?**

அமெரிக்காவைச் சேர்ந்த ***ஜுலியா ப்ரௌன்*** (Julia Brown) அவர் ஓடி முடித்த சாதனையின் நேரம் 35 நிமிடம் 002 வினாடிகள்.

420. **தற்போதைய 10,000 மீட்டர் உலக சாதனை எவ்வளவு?**

29.31.78 நொடிகள். ஓடிச் சாதித்தவர் சீனாவைச் சேர்ந்த ***வாங் ஜுன்சியா*** (Wang Junxia)

421. **கூடைப் பந்தாட்டத்தில் ஆடும் ஆட்டக்காரருடைய ஆட்ட எண்கள் (Number) எதிலிருந்து தொடங்கி எதுவரை வைத்துக் கொள்ளலாம்?**

4லிருந்து தொடங்கி 15 வரை.

**422. கூடைப் பந்தாட்டம் கைப்பந்தாட்டம் இவற்றில் வரும் ஓய்வு நேரத்திற்கு (Time out) உரிய நேரம் எவ்வளவு?**

கூடைப் பந்தாட்டத்திற்குரிய ஓய்வு நேரத்திற்கு ஒரு நிமிடம்.

கைப் பந்தாட்டத்திற்குரிய ஓய்வு நேரத்திற்கு 30 வினாடிகள்.

**423. விளையாட்டுத் துறையில் SAI என்பது எதைக் குறிக்கிறது?**

இந்திய விளையாட்டுத்துறையைக் கட்டுப்படுத்தி வழிநடத்தும் கழகம் இது. Sports Authority of India என்பது இதன் பெயராகும்.

**424. இந்திய விளையாட்டு வீரர்களுக்கான தேசிய நலநிதித் திட்டம் (National Welfare Fund) எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?**

1982 ம் ஆண்டு மார்ச்சு மாதம் தொடங்கப்பட்டது.

**425. எவரெஸ்ட் சிகரத்தை முதன்முதலாகச் சென்றடைந்த இந்திய வீராங்கனை யார்?**

***பச்சேந்திரிபால்***

**426. முதன்முதலாக பெண்கள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 100 விக்கெட்டை வீழ்த்திய இந்திய வீராங்கனை யார்?**

செல்வி ***டியானா எடல்ஜி***. இந்தப் பெண்மணி ஒரு உலக சாதனையாக இதை ஏற்படுத்திய பெருமையை பெற்றிருக்கிறார்.

**427. ரோத்மன்ஸ் கோப்பை எந்த ஆட்டத்திற்கு உரியது?**

ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிக்கு உரிய வெற்றிக்

கோப்பையாகும்.

428. **இந்தியா எப்போதாவது ஒலிம்பிக் பந்தயங்களை நடத்தியுள்ளதா?**

1992ம் ஆண்டில் நடத்துவதற்காக முனைந்தது. இந்தியாவுக்கு வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை.

429. **2000ம் ஆண்டில் ஒலிம்பிக் பந்தயங்கள் எங்கு நடைபெறுகின்றன?**

ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில்.

430. **2004ம் ஆண்டில் ஒலிம்பிக் பந்தயம் எங்கு நடைபெறும்?**

கிரேக்க நாட்டில்.

431. **ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதின் நோக்கம் என்ன?**

ஒலிம்பிக் தீபமானது புனிதமான தூய்மையை (Purity) குறிக்கிறது. பங்கு பெறுகிற, நடத்துகிற அத்தனை பேர்களின் மனங்களிலும் செயல்களிலும் தூய்மை நிறைந்திட வேண்டும் என்ற நோக்கத்திலேயே தீபம் ஏற்றப்படுகிறது.

432. **22 வயதில் 1997ம் ஆண்டின் உலக சதுரங்க வெற்றி வீரராகப் புகழ் பெற்ற விளாதிமிர் கிராம்னிக் (Viladmir Kramnic) எந்த நாட்டினர்?**

ரஷ்யா.

433. **கோலூன்றித் தாண்டும் போட்டியில் பலமுறை உலக சாதனை நிகழ்த்தியிருக்கும் வீவரர் பெயர் என்ன?**

உக்ரேனியன் நாட்டைச் சேர்ந்த ***செர்ஜி பியூப்கா.*** அவரது சாதனை உயரம் 6.14 மீட்டர்.

434. **கிரிக்கெட் ஆட்டத்தில் பந்தடி ஆட்டக்காரர் ஒருவர்**

**எடுத்த உலக சாதனை எவ்வளவு? சாதனை செய்தவர் பெயர் என்ன?**

375 ஓட்டங்கள். நிகழ்த்தியவர் ***பிரியன் லாரா.***

435. **பெண்கள் போடுகிற டென்னிஸ் சர்வீசின் வேகம் என்ன?**

மணிக்கு 197 மைல் வேகம் என்று கணக்கிட்டிருக்கின்றனர். பிரேண்டா ஸ்கல்ட்ஸ் மெகார்த்தி (Branda Schultz Macarthy) என்பவர்தான் அந்த வேகத்தில் சர்வீஸ் போட்டவர்.

436. **16 வயதில் விம்பிள்டன் பட்டம் வென்று சாதனை புரிந்த டென்னிஸ் வீராங்கனை யார்?**

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ***மார்ட்டினா ஹிஞ்சிஸ்***

437. **17 வயதில் விம்பிள்டன் பட்டம் வென்று சாதனை புரிந்த டென்னிஸ் வீரர் யார்?**

***போரிஸ் பெக்கர்.***

438. **உலகத்தில் சிறந்த டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராப் எந்த வயதில் விம்பிள்டன் பட்டத்தை வென்றார்?**

18ம் வயதில்.

439. **16 வயதிற்குள்ளாக யாரேனும் விம்பிள்டன் பட்டத்தை வென்றிருக்கின்றார்களா?**

இருக்கிறாரே! ***லாட்டி டாட்*** (Lotie Dod) எனும் வீராங்கனை. 1887ம் அண்டு தனது 15ம் வயதில் விம்பிள்டன் பட்டத்தை வென்றிருக்கிறார்.

440. **ஆசியப் போட்டிகளில் மல்லேஸ்வரி எனும் வீராங்கனை எந்தப் போட்டியில் தங்கம் வென்றார்?**

எடைத் தூக்கும் போட்டியில். 59 கிலோகிராம் எடைப்

பிரிவில்.

441. கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கையின் அதிரடி ஆட்டக்காரர் பெயர் என்ன?

***ஜெயசூர்யா.*** 340 ஓட்டங்கள் எடுத்தவர்.

442. 37 வயதிலும் உலகத்திலேயே சிறந்த ஓட்ட வீராங்கனையாத் திகழும் மெரிலோன் ஓட்டி என்பவர் எந்த நாட்டுக்காரர்?

ஜமாய்கா.

443. ஒலிம்பிக் பந்தயங்களில் இறுதிப் போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், பதக்கங்கள் பெற முடியாமற் போன இந்திய வீரர்கள் வீராங்கனைகள் யார் யார்?

***1. மில்கா சிங்:*** 1960ம் ஆண்டு 400 மீட்டர் ஓட்டத்தில் நான்காவதாக.

***2. குருபக்சன்சிங்:*** 1964ம் அண்டு 110 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் 4 வதாக வந்தார்

***3. ஸ்ரீராம் சிங்:*** 1976ம் ஆண்டு 800 மீட்டர் ஓட்டத்தில் 6 வதாக வந்தார்.

***4. பி.டி. உஷா:*** 1984ம் ஆண்டு 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் 4 வதாக வந்தார்.

இவர்கள் நான்கு பேரும் சில நொடி நேரத்தில் பதக்கங்களை வெல்லுகிற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள்.

444. 1997 ம் ஆண்டின் சகாரா கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி எந்த இடத்தில் நடைபெற்றது?

கனடாவில் உள்ள டோரண்டோ எனும் நகரில்.

445. **சக்ரா கோப்பைப் போட்டியில் இந்திய வீரர் ஒருவர் நிகழ்த்திய சாதனை என்ன?**

கங்குலி என்ற இந்திய வீரர் 5ல் 4 போட்டிகளில் ஆட்ட நாயகனாக (Man of the Match) பட்டமும் பரிசுகளும் பெற்றார்.

446. **1997ம் ஆண்டு ஜுலை மாதம் 10ந் தேதி நடைபெற்ற அதிக எடையுள்ளவர்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் மைக்டைசன் யார் காதைக் கடித்துத் துப்பி சரித்திர சாதனை படைத்தார்?**

இவாண்டர் ஹோலிபீல்டு (Evander Holy Field) காது கடிபட்டாலும் இவாண்டர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

447. **1997ம் ஆண்டு பெப்சி ஆசிய கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் பங்கு பெற்ற நான்கு நாடுகள் யாவை?**

1. இந்தியா 2. பாகிஸ்தான் 3. ஸ்ரீலங்கா 4. பங்களாதேஷ்

448. **1996ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் எத்தனை நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடைபெற்றன?**

28 போட்டி நிகழ்ச்சிகள்.

449. **ஒலிம்பிக் பந்தயங்களில் எந்த ஆண்டு மேசைப் பந்தாட்டப் போட்டி இணைக்கப்பட்டது?**

1988ம் ஆண்டு நடைபெற்ற பந்தயங்களில்.

450. **விளையாட்டுத்துறை தமிழ் இலக்கியத்தின் தந்தை என்று அறிஞர்களாலும் பொதுமக்களாலும் பாராட்டப்படுகின்ற ஆசிரியர் யார்?**

*டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா.*

# விளையாட்டுக்களில் வினாடி வினா விடை




பல்கலைப் பேரறிஞர்

டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா

M.A., M.P.Ed., Ph.D., D.Litt., D.Ed., FUWAI